பாரய ணஞ்செயம,தி யூகமு
மட்ட சிததியுர லனப ருக்கருள
விருது கடடியபொ னனனமே
யணட கோடிபுகழ காவை வாழுமகி
லாணட நாயகியெ னமமையே. (௫)

பெரியநாயகி விருத்தம்.

காறறைப் பிடிததுமட கரகத தடைததபடி
கணமப புனறகுளுறுகு
கடைகெடட நவவாயில டெறறபசு மடகலக
காயததுள ளேயிருததிச
சோறறைச சமததிநீ பநதிததுவைககத
துருசதிக்கண மதுவெனனவே
துள்ளித துடிதகெனன பேறுபெற றேனருட
டோயநீ பாயசசலசெய்து
காறறைப் பதிததவெதன ஞானமாம பயிரதனை
நாடடிட புலப்பட்டியு
நமனுன திடபூடு மணுகா மன முனனின்று
நாடுசிவ போகமான
சோற்றைப பகுந்தருளி யெனையாள வல்லையோ
பெரியவகி லாணடகோடி
பெற்றநாயகி பெரிய கயிலைமா நகாமருவு
பெரியநா யகியமமையே. (௫)

தந்தைதாய்.

———:*:———

தந்தைதாய்மகவுமனைவாழ்க்கையாக்கை
சகமனைத்துமெள்ளியருடழைத்தபோதே
யிந்திரசாலங்கனவுகானனீரா
யிருந்ததுவேயிவ்வியற்கையென்னேயென்னே (க)

என்னைநானேகொடுக்கவொருப்பட்டகால
மியாதிருந்தென்னவைபோயென்னென்னனீங்கா
வன்னைபோலருள்பொழியுங்கருணைவாரி
யானந்தப்பெருமுகிலேயாரேசொல்லாய, (உ)

அரசேநின்றிருக்கருணையல்லாலொன்றை
யறியாதசிறியேனுன்றனைமுன்னிக
கரைசேருமபக்குவருடனையைக்கூட்டி
கைப்பிடியேகடைப்பிடியாகக்கருத்துடக்கண்டேன. (௩)

கண்டேனீங்கென்னையுமெனையுமொன்றாக
கருணையுநீயானென்னையாண்டகண்டேனாக்கண்டேன்
விண்டேனென்றெனைப்புரப்பாதகனாலென்னா
விண்டதுன்னருட்களிப்பின்விபபாலன்றோ (௪)

ஓவென்றசச்ச வெளியென்றேநின்றிரு
குயிரையெல்லாமுமெனவுடனாயின்பத்
தேவென்றநீகலந்துகலந்துமுத்தி
சேர்ந்தோரேயறுகுறைவாமோசெகவிலாசம. (௫)

செகத்தையெல்லாமணுவளவுஞ்சித்தறவணைந்து
சேர்த்தணுவிலவைப்பைபணுத்திரளையெல்லா
மகத்துவமாப்பிரமாண்டமாகச்செய்யும்
வல்லவாநீநினைந்தவாறேயெல்லாம. (௬)

சொல்லாலேவாய்துடிப்பதல்லானெஞ்சந்
துடித்திருகண்ணீராருவிசொரியத்தேம்பிக்
கல்லாலேயிருந்தநெஞ்சங்கல்லான்முகக்கட்
கனியேநெக்குருகிடவுங்காணேனென்கொல்லோ. (௭)

பெற்றவட்கே.

பெற்றவட்கேதெரியுமந்தவருத்தம்பிள்ளை
பெறாப்பேதையறிவாளோபேரானந்த
முற்றவர்க்கேகண்ணீர்கம்பலையுண்டாகு
முறாதவரேகன்னெஞ்சமுடையராவார். (௧)

ஆவாவென்றழுதுதொழுங்கையராகி
யப்பனேயானந்தவடிவேளென்பார்
காவாவென்றவாக்கருளுங்கருணைப்பெருந்தாய
வன்னெஞ்சாக்கிரங்குவதெந்நாணீயே (௨)

நீயேயிங்கெளியேற்குந்தாகமோக
நினைவூடேநின்றுணர்த்திகழ்ச்சலாலே
பேயேற்குத்தனக்கென்னவோரன்புமுண்டோ
பெம்மானேயின்னமன்புபெருகப்பாராய். (௩)

பாராயோவென்றுபரமெல்லாமப்பா
பகருமுன்னேதெரியாதோபாவியேன்முன்
வாராயோவின்னமொருகாலானாலு
மலர்க்காலென்சென்னிமிசைவைத்திடாயோ. (௪)

வைத்திடுங்காலைப்பிடித்துக்கண்ணிணையிலொற்றிப்பில
வைத்தணைத்துக்கொண்டுகையாலணைத்துக்கட்டிச
சித்தமிசைப்புகவிருத்திப்பிடித்துக்கொண்டு
தியக்கமறவின்பசுகஞ்சேர்வதென்றோ. (௫)

சேரமறச்சிறியனதைப்பிரித்தெந்நாளுந்
திருவடிப்பேரின்பத்துடனேசேரவென்னை
மாறாகநானலைந்தேனப்பாசேர்த்தா
னறிந்திருந்துமாயையிலேனழுந்தவைத்தாய். (௬)

வைத்தபொருளுடலாவியூன்றுநின்னை
வசமெனவேயானக்கொடுக்கவாங்கிக்கொண்டு
சித்தமிசைப்புகுந்ததுதானமெய்யோபொய்யோ
சிறியேற்கிங்குள்ளவறியாய்த்தெரியாவண்ணம். (௭)

தெரியாதோவென்றாளுமபேரானந்தத்
தெள்ளமுதமுதவாமற்றிவலைகாட்டி
வரையாகவலக்கழித்தாயுண்டெடுத்து
வாழ்ந்தேனுளிரண்டுகொண்மாடுபோலே. (௮)

பாடுமககள்சிறறிடையாரசெமபொனுடை
  வைததகனதனமேடைமாடகூடம
வீடுமெனபாறறொடாசையோவிடைவிடாமன
  மிககததிவீடெனறேவிளககலவேணடும. (௯)

விளககவெனககுளளுனளேவிளககாநினற
  வேதகமேபோதகமேவிமலவாழ்வே
களஙகராகிதப்பொருளேயெனனைநீஙகாக
  கணணுதலேநாதாநதககாடசிபபேறே (௧0)

நாதமோநாதாநதவெளியேசுதத
  ஞாதுருவேஞானமேஞேயமேநல
வேதமேவேதமுடிவானமோன
  விததேயிஙகெனனையினிவிடடடாதே. (௧௧)

க ல் ல ா லி ன .

கலலாலினீழறனிலொருநாலவாககுங
  கடவுணீயுணர்ததுவதுஙகைககாடடெனறாற
சொலலாலேசொலபபடுமோசொலலுநதனமை
  துருமபுபற்றிககடலகடககுநதுணிபேயனறே. (௧)

அன்றேவாமோவெனவுஞ்சமயகோடி
  யததனையுமெவவேறுபாறறநேரே
நினறேயேநினைபபெறுமாறெவவாறுஙகே
  நினனருளகொணடறிவதலலானெறிவேறுணடோ. (௨)

ஒனறிபாாககினினனையனறிலவேறே
  நிலைநாடடிககாலவாழநீயலாத
குறியாதுமிலலையெனறுலயாஙகணாவேறே
  கோதைதயொருகூறுடையாய்கூறாய்கூறாய. (௩)

கூறாயவைம்பூதச்சுமையைததாஙகிக
  குணமிலாமனமெனும்பேய்ககுரஙகினபினனே
மாறாதகவலையுடன்சுழலவென்னை
  வைத்தனையேபரமேநின்மகிமைநனறே, (௪)

நன்றெனவுந்தீதெனவுமெனக்கிங்குண்டோ
நானாகிநீயிருந்தநியாயஞ்சற்றே
யின்றெனக்குவெளியானாலெல்லாமல்ல
லிறைவாநின்னடியருடனிருந்துவாழ்வேன். (ரு)

வாழ்வெனவுந்தாழ்வெனவுமிரண்டாப்பேசும்
வையகத்தார்கற்பனையாமயக்கமான
பாழ்வலையைக்கிழித்துதறிச்செயலபோய்வாழப்
பரமேநின்னானந்தப்பாரவையெங்கே. (சு)

எங்கேயெங்கேயருளென்றைமையிரந்தா
னேழையிவனெனவுமெண்ணியிசைகூரு
மங்கேயங்கேயெளிவந்தென்னையாண்ட
வாரமுதேயுனைக்காணபானலந்துபோனேன். (எ)

போனநாட்கிரங்குவதேதொழிலாவிங்ஙன
பொருந்துநாளதன்னையும்போக்கினேனென்ன
ஞானநாயகனேநின் மோனஞான
நாட்டமுற்றுவாழ்ந்திருக்குநாளெந்நாளோ. (அ)

நாட்பட்டகமலமன்னவிதயத்தூடு
நற்றந்தேனேதுணையாநாரிமாதாகண்
வாட்பட்டகாயமிந்தக்காயமென்றே
வனகூற்றுமுயிர்பிடிக்கவருமுனீதி. (கூ)

நீதியெங்கேமறையெங்கேமன்விண்ணெங்கே
நித்தியபராமவாகளெங்கேநெறிசப்பாத
சாதியெங்கேயொழுக்கமெங்கேயாங்களெங்கே
தற்பரநீபின்னுமொன்றைச்சமைப்பதானால். (௧௦)

ஆனாலும்யானெனத்திங்கற்றதெல்லை
யதுபோதுமத்தகதிதானல்லவென்று
போனாலும்யானபோவனல்லானமோனப்
புண்ணியனேவேறுமொருபொருளைநாடேன். (௧௧)

பொருளேநின்பூரணமேலிட்டகாலம்
போக்குவரவுண்டோதற்போதமுண்டோ
விருளானுண்டோவல்லால்வெளிதானுண்டோ
வின்பமுண்டோதுன்பமுண்டோயாமக்குண்டோ. (௧௨)

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT.

உண்டோநீ படைத்தவுயிர்த் திரளிலென் போ
லொருபாவி மேதகாதி யுலகம் பொய்யாகக்
கண்டேயு மௌனவுத்தி துறவுமின்றிக்
காசினிக்குளலைந்தவரார் கண்டாய் தேவே. (௧௩)

தேவரெல்லாந் தொழச்சிவந்த செந்தாள் முக்கட்
செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப்பாக
மூவர்சொலுந் தமிழ்கேட்குந் திருச்செவிக்கே
மூடனேன் புலம்பியசொன் முற்றுமோ தான். (௧௪)

முற்றுமோ வெனக்கினியானந்த வாழ்வு
மூதறிவுக் கினியாய சின்முளரித் தாளிற்
பற்றுமோ சற்றுமில்லையையோ வென்போற்
பாவிபடுங் கலக்கம் பார்த்திலாயோ. (௧௫)

பார்த்தனவெல்லா மழியு மதனாற் சடமப்
பார்த்தே பார்த்திருக்கப் பரமே மோன
மூர்த்திவடிவா யுணர்த்துங் கைக்காட்டெல்லை
முற்றியென நல்லவினை முடிவதென்றோ. (௧௬)

என்றோநீ யன்றியா மென்பதெல்லை
யித்திறகவெல்லாந் தாமில்லையென்றே
பொன்றிடச்செய் வல்லவனீ யெனைப்படைத்தும்
பொறுப்புடையா யென்னினது பொருந்திடாதே. (௧௭)

பொருந்துசக மனைத்தினையும் பொய்பொய்யென்று
புகன்றபடி மெய்யன்றே போதரூபத்
திருந்தபடியென்றிருப்ப தன்றேயன்றோ
வெம்பெருமான் யான்கவலை யற்றாக்காலம். (௧௮)

காலமே காலமொரு மூன்றுங்காட்டுங்
காரணமே காரணகாரியங்களெல்லாங்
கோலமேயெனவா வாவென்றுகூவிக்
குறைவறநின்னருள் கொடுத்தாற் குறைவோ சொல்லாய். (௧௯)

சொல்லாயதருக்கமெல்லாங் கடந்துநின்ற
சொரூபானந்தச்சுடரே தொண்டனேனைக்
கல்லாகப் படைத்தாலு மெத்தநன்றே
காணமுடனுனுறவு கலக்கமாட்டேன். (௨0)

கலங்காதநெஞ்சுடையஞானதீரர்
கடவுளுனைக்காணவேகாயமாதி
புலங்காணாதொருவனன்றோஞானம்பேசிப்
பொய்க்கூடுகாத்ததென்னபுதுமைகண்டாய். (உக)

கண்டிலையோயான்படும்பாடெல்லாமூன்று
கண்ணிருந்துந்தெரியாதோகசிந்துள்ளன்பர்
தொண்டரடித்தொண்டனன்றோகருணைநீங்காச்
சுத்தபரிபூரணமாஞ்சோதிநாதா. (உஉ)

சோதியாயிருட்பிழம்பைச்சூறையாடுந்
தூவெளியேயெனைத்தொடர்ந்துதொடர்ந்தெந்நாளும்
வாதியாநின்றவினைப்பகையைவென்று
வாழ்வெய்வகுனைப்பிரிந்துமயங்குகின்றேன். (உங)

மயக்குறுமென்மனமணுவாப்பாதைகாட்டி
வல்வினையைப்பறித்தனையேவாழ்வேநாயேன்
செய்கடனேசெயலெல்லாநின்சேயென்று
செங்கைகுவிப்பேனல்லாற்செயல்வேறில்லை. (உச)

வேறுபடுஞ்சமயமெல்லாம்புகுந்துபார்க்கின்
விளங்குபரம்பொருளேநின்விளையாட்டல்லான்
மாறுபடுங்கருத்தில்லைமுடிவின்மோன
வாரிதியினதித்திரள்போலவயங்கிற்றம்மா. (உரு)

அம்மாவீததிசயந்தானன்றோவன்றே
வகண்டநிலையாகியெனையறியாவண்ணஞ்
சும்மாவேயிருக்கவைத்தாயையாவாங்கே
சுகமயமாயிருப்பதல்லாற்சொல்வானென்னே. (உசா)

என்னேநான்பிறந்துழலவந்தவாறிங்
கெனக்கெனவோர்செயலில்லையேழையேனான்
முன்னேசெய்வினையெனவும்பின்னேவந்து
மூளும்வினையெனவுமவர்முறையென்னேதாய (உஎ)

தாயானதன்னருளைப்பரப்பவைத்துத்
தமியேனைப்புரவாமற்றள்ளித்தள்ளிப்
போயனனென்றெனைச்சொலயாவேகதேசம்
பூரணத்துக்குண்டோதான்புகலல்வேண்டும். (உஅ)

புகலரியநின்விளையாட்டென்னேயெந்தாய்
புன்மையறிவுடையவென்னைப்பொருளாப்பண்ணி
யிகலவினைகருமலமாயைகன்மத்தூடே
யிடருறவுஞ்செய்ததனையேயிரக்கமீதோ. (௨௯)

இரக்கமொடுபொறையறிவாசார
மில்லேனுனல்லோர்களீட்டங்கண்டாற
கரக்குமியல்புடையேனப்பாழ்நெஞ்சமெந்தாய
கருந்தாதோவல்லுருக்கோகரியகல்லோ. (௩௦)

பராபரக்கண்ணி.

சீராருந்தெய்வத்திருவருளாம்பூமிமுதற
பாராதியாண்டபதியேபராபரமே. (௧)

கண்ணாரக்கண்டோர்கருப்பொருள்காணாமலருள்
விண்ணூடிருந்தவின்பவெற்பேபராபரமே. (௨)

சிந்தித்தவெல்லாமென்சிந்தையறிந்தேயுதவ
வந்தகருணைமழையேபராபரமே. (௩)

ஆராவமுதேயரசேயானந்தவெள்ளப்
பேராறேமோனப்பெருக்கேபராபரமே. (௪)

ஆரறிவாரென்னவனந்தமறையோலமிடும
பேரறிவேயின்பப்பெருக்கேபராபரமே (௫)

உரையிறந்தவன்பருளத்தோங்கொளியாயோங்கிக்
கரையிறந்தவின்பக்கடலேபராபரமே. (௬)

எத்திக்குந்தானாகியென்னிதயத்தேயூறித்
தித்திக்குமானந்தத்தேனேபராபரமே (௭)

திக்கொடுகீழ்மேலுந்திருவருளாம்பொற்பறிந்தோர
கைக்குள்வளர்நெல்லிக்கனியேபராபரமே. (௮)

முத்தேபவளமேமொய்த்தபசும்பொற்சுடரே
சித்தேயென்னுள்ளத்தெளிவேபராபரமே. (௯)

கண்ணேகருத்தேயென்கற்பகமேகண்ணிறைந்த
விண்ணேயானந்தவியப்பேபராபரமே (௧௦)

வாக்காய்மனதாய்மனவாக்கிறந்தவர்பாற்
றாக்காதேதாக்குந்தனியேபராபரமே. (௧௧)

பார்த்தவிடமெல்லாம்பரவெளியாய்த்தோன்றவொரு
வார்த்தைசொலவந்தமனுவேபராபரமே. (௧௨)

வானந்தமானநினைநந்தம்வைத்துவைத்துப்பார்க்கவெனக்
கானந்தந்தந்தவரசேபராபரமே. (௧௩)

அன்பைப்பெருக்கியெனதாருயிரைக்காக்கவந்த
வின்பப்பெருக்கேயிறையேபராபரமே. (௧௪)

வானமெல்லாங்கொண்டமவுனமணிப்பெட்டகத்துக்
கானபணியான்மணியேபராபரமே. (௧௫)

ஓடுமிருநதியுமொன்றாகக்கண்டவர்க்
கூடுமெய்ப்பொருளானந்தமேபராபரமே (௧௬)

சித்தநினைவுஞ்செய்யுஞ்செயலுநீயெனவா
ழுத்தமர்கட்கானவுறவேபராபரமே. (௧௭)

போதாந்தப்புண்ணியர்கள்போற்றிசயபோற்றியெனும்
வேதாந்தவீட்டில்விளக்கேபராபரமே (௧௮)

பூதாந்தவீதிமுள்ளறிதொழுமன்பருக்கே
சித்தாந்தவீதிவருந்தேவேபராபரமே (௧௯)

நானுமுடலமென்னநியானென்பதற
வானந்தமவேண்டியலந்தேன்பராபரமே. (௨௦)

என்புருகிநெஞ்சமிளகிக்கரைந்துகரைந்
தன்புருவாய்நிற்கவலந்தேனேபராபரமே (௨௧)

சுத்தவறிவாயசுகப்பொருணீயல்லாலென்
சித்தந்தெளியாதென்செய்வேன்பராபரமே. (௨௨)

மாறாவனுபூதிவாய்க்கினல்லாலென்மயக்கந்
தேறாதென்செய்வேன்சிவமேபராபரமே. (௨௩)

தாகமறிந்தின்பநிட்டைதாராயேற்கெடுவேன்
றேகம்விழுந்திடினென்செய்வேன்பராபரமே. (௨௪)

அப்பாவென்னெப்பில்லைப்பேயாற்றகிலேன்போற்றியென்று
செப்புவதல்லால்வேறென்செய்வேன்பராபரமே. (௨௫)

உற்றறியுமென்னறிவுமுட்கருவிபோஞ்சவிமாண்
டற்றுமின்பாதந்திலையேயையாபராபரமே. (௨௬)

சொல்லாலடங்காச்சுகக்கடலில்வாய்மடுக்கி
னல்லாலென்றுக்கமறுமோபராபரமே. (௨௭)

பாராயோவென்னைமுகம்பார்த்தொருகாலென்கவலை
தீராயோவாய்திறந்துசெப்பாய்பராபரமே. (௨௮)

ஓயாதோவென்கவலையுள்ளேயானந்தவெள்ளம்
பாயாதோவையாபகராய்பராபரமே. (௨௯)

ஓகோவுனைப்பிரிந்தாருள்ளங்கனலில்வைத்த
பாகோமெழுகோபகராய்பராபரமே (௩௦)

கூடாததவறிவத்தனையுங்கொள்ளைகொடுத்தூனனுருவைப
பாராதவனுனென்னைமுகம்பாராய்பராபரமே, (௩௧)

கடலமுதேதேனேயெனக்கண்ணேகவலைப
படமுடியாதென்னைமுகம்பாரீபராபரமே, (௩௨)

உள்ளமறிவாயுழப்பறிவாய்நானேழை
தள்ளிவிடின்மெத்தத்தவிப்பேன்பராபரமே, (௩௩)

கன்றினுக்குச்சேதாக்கனிந்திரங்கல்போலவெனக
கென்றிரங்குவாய்கருணையெந்தாய்பராபரமே, (௩௪)

எண்ணாதவெண்ணமெலாமெண்ணியெண்ணியேழைநெஞ்சம்
புண்ணாகச்செய்ததினிப்போதும்பராபரமே. (௩௫)

ஆழித்துரும்பெனவேயங்குமிங்குமுன்னடிமை
பாழிற்றிரிவதென்னபாவம்பராபரமே (௩௬)

கற்றவறிவாலுனைநான்கண்டவன்போற்கூத்தாடிற்
குற்றமென்றென்னெஞ்சேகொதிக்கும்பராபரமே. (௩௭)

ஐயோவுனைக்காணவாசைகொண்டதத்தனையும்
பொய்யோவெளியாப்புகலாய்பராபரமே. (௩௮)

துன்பக்கண்ணீரிற்றுளைந்தேற்குன்னானந்த
வின்பக்கண்ணீர்வருவதெந்நாள்பராபரமே (௩௯)

வஞ்சனையும்பொய்யுமுள்ளேவைத்தழுக்காறாயுளறு
நெஞ்சனுக்குமுண்டோநெறிதான்பராபரமே. (௪௦)

பாசம்போய்நின்றவர்போற்பாராட்டியானலு
மோசம்போனேனென்முறையோபராபரமே (௪௧)

நன்றறியேன்றீதறியேனென்றுநின்றவனு
ரொன்றறியேனேழையென்னேபராபரமே. (௪௨)

இன்றுபுதி தன்றே யெளியேன் படுந்துயர
மொன்று மறியாயோ வுரையாய் பராபரமே. (சங)

எத்தனைதான் சன்மமெடுத் தெத்தனைநா னெட்டதுய
ரத்தனையு நீயறிந்த தன்றோ பராபரமே. (சச)

இந்தநாட் சற்று மிரங்கிலையே பின்காலன் வரு
மந்தநாட் காக்கவல்லார் யார்காண் பராபரமே. (சரு)

உற்றற்ற நாடி யுளமருண்ட பாவியைநீ
சற்றிரங்கி யாளத் தகாதோ பராபரமே. (சசா)

எள்ளளவு நின்னைவிட வில்லாவென் னைமயக்கிற்
றள்ளுதலா லென்னபலன் சாற்றாய் பராபரமே (சஎ)

பாடிப் படித்துலகிற் பாராட்ட நிற்பதற்கோ
தேடியெனை யடிமைசேர்த்தாய் பராபரமே. (சஅ)

சொன்னதைச் சொல்வதல்லாற் சொல்லறியே னென்சொல்லிற்
கென்னதைச் சொல்வே னெளியேன் பராபரமே (சகூ)

சொல்லும் பொருளுமறச் சும்மா விருப்பதற்கே
யல்லும் பகலுமென்ற னாசை பராபரமே. (ருo)

நேசர்திருவிற்பணிடை யலையாலுன் னடிமைக்
காசையுண்டோ நீயறியா தன்றே பராபரமே (ருக)

துச்சனென வேண்டாமித் தொல்லுலகி லல்லல்கண்டா
லச்சமிக வுடையேனையா பராபரமே. (ருஉ)

கண்ணுவா ரேனுமுனைக் கைகூவியாராயினந்த
மண்ணுவா ரட்பை மதியேன் பராபரமே. (ருங)

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
வெல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே. (ருச)

எத்தாற் பிழைப்பேனோ வெந்தையே நின்னருட்கே
பித்தானேன் மெத்தவுநான் பேதை பராபரமே (ருரு)

வாயினாற் பேசாமவுனத்தை வைத்திருந்துந்
தாயிலாப் போனானளாந் தேன் பராபரமே. (ருசா)

அன்னையிலாச் சேயைப்போ லலக்கணுற் றேன்கண்ணா
ரென்னைக் கத்திற்றாய்போ லிருக்கும் பராபரமே. (ருஎ)

உற்றநினைக் கிற்றுயர முள்ளுள்ளே சோதியாய்ப்
பற்றிக்கொண் டேதென்னைக் கைமுகம்பார் நீ பராபரமே. (ருஅ)

பொய்யனிவனென்றுமெள்ளப்போதிப்பார்சொற்கேட்டுக்
கைவிடவுமவேண்டாமெனக்கண்ணேபராபரமே. (௫௯)

எண்ணமறிந்தேயிளைப்பறிந்தேயேழையுய்யும்
வண்ணந்திருக்கருணைவையாய்பராபரமே. (௬0)

நாட்டாதேயென்னையொன்றினாட்டியிதமகிதங்
காட்டாதேயெல்லாநீகண்டாய்பராபரமே (௬௧)

உன்னைநினைந்துன்னிறைவினுள்ளேயுலாவுமென்னை
யன்னைவயிற்றின்மடைக்காதேபராபரமே. (௬௨)

பரமுனக்கென்றெண்ணும்பழக்கமேமாறா
வரமெனக்குத்தந்தருளென்வாழ்வேபராபரமே. (௬௩)

வந்தித்துநின்னைமறவாக்கடனுக்கச்
சிந்திக்கநின்னருள்செய்யாய்பராபரமே (௬௪)

எவ்வுயிருமென்னுயிர்போலெண்ணியிரங்கவுநின்
றெய்வவருட்கருணைசெய்யாய்பராபரமே. (௬௫)

வெட்டவெளிப்பேதையன்யான்வேறுகப்பொன்றறியேன்
சிட்டருடன்சேரானந்தந்தெண்டன்பராபரமே. (௬௬)

இரவுபகலற்றவிடத்தேகாந்தயோகம்
வரவுந்திருக்கருணைவையாய்பராபரமே. (௬௭)

மால்காட்டிச்சிந்தைமயங்காமனின்றுசுகக்
கால்காட்டிவாங்காதேகண்டாய்பராபரமே. (௬௮)

எப்பொருளுநீயெனவேயெண்ணிநான்றேனுற்ற
வைப்பையழியாநிலையாவையாய்பராபரமே. (௬௯)

சும்மாவிருப்பதுவேசுட்டற்றபூரணமென்
றெம்மாலறிதற்கெளிதோபராபரமே. (௭0)

முன்னொடுபின்பக்கமுடியடிநாப்பண்ணற்றநின்
றன்னொடுநானிற்பதென்றோசாற்றாய்பராபரமே (௭௧)

மைவண்ணந்தீர்ந்தமவுனிசொன்னதெவ்வண்ண
மவ்வண்ணநிட்டையருளாய்பராபரமே. (௭௨)

வித்தன்றியாதும்விளைவதுண்டோநின்னருளாஞ்
சித்தன்றியாங்களுண்டோசெப்பாய்பராபரமே. (௭௩)

ஆங்காரமற்றுன்னறிவானவன்பருக்கே
தூங்காததூக்கமதுதூக்கும்பராபரமே. (௭௪)

சிந்தையவிழ்ந்தவிழ்ந்துசின்மயமாநின்னடிக்கே
வந்தவர்க்கேயின்பநிலைவாய்க்கும்பராபரமே (எரு)

சொல்லாடாதாவுமனைப்போற்சொல்லிறந்துநீயாகி
னல்லாலெனக்குழைந்ததியாமோபராபரமே. (எசு)

பேச்சாகாமோனம்பிறவாமுளைத்ததென்ற
காச்சாசுமேற்பயனுண்டாமோபராபரமே. (எஎ)

கெட்டியென்றுன்னைப்பாமலங்கெட்டயாகத்தோராபூரணமாகத்
தொட்டிலுக்குட்சேய்போற்றுயின்றாபராபரமே. (எஅ)

காட்டவருளிருக்கக்காணாதிருண்மலத்து
நாட்டமெனக்குவரனென்றோபராபரமே. (எகூ)

எத்தன்மைக்குற்றமியற்றிடினுந்தாய்பொறுக்கு
மத்தன்மைநின்னருளுமன்றோபராபரமே. (அ0)

எத்தனைபோதோர்ந்தாலுமென்னாலேயின்பமுண்டோ
சித்துருவேயின்பசிவமேபராபரமே. (அக)

மண்ணொடுவிண்காட்டிமறைந்தமறைப்பாவருளைக்
கண்ணொடுகண்ணாகவென்றுகாண்பேன்பராபரமே. (அ௨)

பஞ்சரித்துநின்னைப்பலகாலிரந்ததெல்லா
மஞ்சலெனும்பொருட்டேயன்றோபராபரமே. (அ௩)

எங்கெங்கேபார்த்தாலுமவ்வுயிர்க்குமவ்வுயிரா
யங்கங்கிருப்பதுநீயன்றோபராபரமே (அ௪)

அனைத்துமாய்நின்றுயேயானவேறன்றேநினை
நினைக்குங்காலெங்கேநிகழ்த்தாய்பராபரமே. (அ௫)

நின்போதத்தாலேநினைப்புமறப்புமென்று
லென்போதமெங்கேயியம்பாய்பராபரமே. (அசு)

ஒன்றைநினைந்தொன்றைமறந்தோமெனவெல்லாநீ
யென்றறிந்தாலெங்கேயியங்கும்பராபரமே. (அஎ)

கொழுந்திலவயிரமெனக்கோதறவுள்ளன்பி
லழுந்துமவர்க்கேசுகமுண்டாகும்பராபரமே. (அஅ)

பற்றும்பயிர்க்குப்படர்கொழுந்துபோற்பருவம்
பெற்றவர்க்கேநின்னருடான்பேறாம்பராபரமே. (அகூ)

யோகியர்க்கேஞானமொழுங்காம்பேரன்பான
தாகியரும்யோகமுன்னேசார்ந்தோர்பராபரமே. (கூ0)

அல்லும்பகலுமறிவாகிநின்றவர்க்கே
சொல்லும்பொருளுஞ்சுமைகாண்பராபரமே (௯௧)

எச்சிலென்றுபூவையிகழ்ந்தோர்சுனைபோற்றப்
பசிலையுங்கிள்ளப்படுமோபராபரமே. (௯௨)

அந்தக்கரணமடங்கத்துறப்பதுவே
யெந்தத்துறவினுநன்றெந்தாய்பராபரமே. (௯௩)

தன்னையறிந்தாற்றலைவன்மேற்பற்றலது
பின்னையொருபற்றுமுண்டோபேசாய்பராபரமே (௯௪)

அன்பாற்கரைந்துகண்ணீராறுகண்டுபுண்ணியருக்
குன்பாலவரவழிதானுண்டோபராபரமே. (௯௫)

தன்னையறிந்தருளேதாரகமாநிற்பதுவே
யுன்னையறிதற்குபாயம்பராபரமே. (௯௬)

கற்றகலையானிலைதான்காணுமோகாணபசெல்லா
மற்றவிடத்தேவெளியாமன்றோபராபரமே (௯௭)

கண்மூடிக்கண்விழித்துக்காண்பதுண்டோநின்னருளாம்
விண்மூடினெல்லாமவெளியாம்பராபரமே. (௯௮)

நேரேநின்றருளென்னொருசைக்கவரின்றென்றும்
பாரேன்சுகமும்படைப்பேன்பராபரமே. (௯௯)

வான்காணவேண்டிடின்மலையேறலொக்குமுன்னை
நான்காணப்பாவனைசெய்நாட்டம்பராபரமே (௧00)

வாதனைவிடேனென்றுநின்மனனிலல்லாலவேறுமொரு
சாதனைதானுண்டோநீசாற்றாய்பராபரமே. (௧0௧)

பாரசமும்விண்ணகமும்பற்றுசநிற்பதருட்
டாரகத்தைப்பற்றியன்றோசாற்றாய்பராபரமே. (௧0௨)

விளக்குந்தகளியையும்வேறெனஞானிநினைத்
துளக்கமறச்சிவனென்றுசொல்லவாபராபரமே. (௧0௩)

பாராதிநீயாப்பகர்ந்தாலகமெனவு
மாராயுஞ்சீவனுநீயாங்காண்பராபரமே. (௧0௪)

பொய்யைப்பொய்யென்றறியும்போதத்துக்காதரவுன்
மெய்யருளேயன்றோவிளம்பாய்பராபரமே. (௧0௫)

வருவான்வந்தேனெனல்போன்மன்னியழியுஞ்சகத்தைத்
தெரிவாகவில்லையென்றதீரம்பராபரமே. (௧0௬)

மாயாசகமிலையென்மறந்தேனகோர்பற்றுமிலை
நீயேநானென்றுவந்துநிற்பேனபராபரமே. (௧௦௭)

வாணுதிசெய்யெனவேவைத்தமறையெனையுநீ
தானாகச்சொல்லாதோசாற்றாயபராபரமே. (௧௦௮)

வெள்ளக்கருணைதந்தவேழமாநின்னருட்கென்
கள்ளக்கருத்தேகவளம்பராபரமே (௧௦௯)

வண்டாயத்துவண்டுமேவுண்மலரிணைநேர
கொண்டாகக்கோவினபங்கொடுப்பாயபராபரமே (௧௧௦)

மாயைமுதலாமவினைநீமன்னுயிராநீயன்னுயிர்தோறு
தாயுமறிவானதுநீயன்றோபராபரமே (௧௧௧)

என்னறிவுயானுமெனதென்பதுவுமாமிகைக
ணின்னவையேயன்றோநிகழ்ந்தாயபராபரமே (௧௧௨)

பாரறியாதண்டபரப்பறியாதுனபெருமை
யாரறிவாரநானோவறிவேன்பராபரமே. (௧௧௩)

அண்டமனைத்திலுமாயப்பாலுமப்பாலுங
கொண்டநினையாரறிந்துகொள்வார்பராபரமே (௧௧௪)

ஒப்புமொழியின்றியொலிபுகாமோனவட்டக
கப்பலுக்காயவான்பொருணீகண்டாயபராபரமே. (௧௧௫)

என்போலெளியவருமெங்கேநுமபார்க்கதானு
முன்போலவலியவருமுண்டோபராபரமே. (௧௧௬)

பாக்கினண்டபிண்டபரப்பனைத்துநினசெயலை
யாக்குஞ்சயலில்லையேயையாபராபரமே. (௧௧௭)

ஒன்றேபலவேயுருவேயருவேயோ
வென்றேயழைப்பதுனையென்றோபராபரமே. (௧௧௮)

செப்புவதெல்லாஞ்செபநானசிந்திப்பதெல்லாநின
னொப்பிறியானவெனவோர்ந்தேனபராபரமே. (௧௧௯)

ஆரிருந்தென்னார்போயெனனாமுதாநின்னருளின
சீரிருந்தாலுய்வேன்சிவமேபராபரமே. (௧௨௦)

வஞ்சநமன்வாதனைக்குமவன்பிறவிவேதனைக்கு
மஞ்சியுனையடைந்தேனையாபராபரமே. (௧௨௧)

எந்தப்படியுன்னிதயமிருந்ததெமக்
கந்தப்படிவருவதன்றோபராபரமே. (௧௨௨)

எந்தெந்தநாளுமெனைப்பிரியாதென்னுயிராய்ச்
சிந்தைகுடிகொண்டவருட்டேவேபராபரமே. (கஉ௩)

அஞ்சலஞ்சலென்றடிமைக்கபயமப்போதைக்கப்போதே
நெஞ்சிலுணர்த்துநிறைவேபராபரமே. (கஉ௪)

என்னையுன்றன்கைக்களித்தாயாவரென்னையான்கொடுத்துப்
பின்னையுன்றன்பெற்றநலம்பேசென்பராபரமே. (கஉ௫)

வாய்பேசாவூமையெனவைத்தவென்றன்மேலுனது
தாயாகவந்தருளைத்தந்தாய்பராபரமே (கஉ௬)

தன்னைத்தந்தென்னைத்தடுத்தாண்டநின்கருணைக்
கென்னைக்கொண்டென்னபலனெந்தாய்பராபரமே. (கஉ௭)

மாகசண்டாக்காமறலிபட்டபாட்டையுன்னினிய
பாகமின்னபாகமென்னடியர்காணப்பராபரமே. (கஉ௮)

சுட்டியுணராமற்றறியநிலையாகுவெளியில்
விட்டநினையாமென்றுவியப்பேன்பராபரமே. (கஉ௯)

ஏதொன்றுமின்றியென்னைச்சும்மாவிருக்கவைத்தா
யீதொன்றும்போதாதோவின்பம்பராபரமே. (க௩0)

வாயொன்றும்பேசாப்புனிதனாய்வந்தாண்ட
தேயொன்றும்போதாதோவின்பம்பராபரமே. (க௩௧)

என்றுமிருந்தபடிக்கென்னையெனக்களித்த
தொன்றும்போதாதோவுரையாய்பராபரமே (க௩உ)

எண்டிசைகீழ்மேலானவெல்லாம்பெருவெளியாக்
கண்டவிடத்தென்னையுநான்கண்டேன்பராபரமே. (க௩௩)

பித்தனையேதுமறியாப்பேதையனையாண்டவுனக்
கெத்தனைதானதெண்டனிடுவேன்பராபரமே (க௩௪)

தாயாகாப்பத்தூடனமுந்தணைந்தீந்தருளு
நேயவுனையாரேநினையார்பராபரமே. (க௩௫)

விரிந்தமனமொடுங்குமவேளையிஞ்சுகப்
பரந்தவருள்வாழிபதியேபராபரமே. (க௩௬)

சிந்தனைபோய்நானெனல்போய்த்தேக்கவின்பமாமழையை
வந்துபொழிந்தனைநீவாழிபராபரமே. (க௩௭)

தந்தேனேயோவசனந்தந்தபடிக்கின்பமுமாய்
வந்தேனேயென்றனைநீவாழிபராபரமே. (க௩௮)

மண்ணும்விண்ணும்வந்துவணங்காவோநின்னருளைக்
கண்ணுறவுட்கண்டவரைக்கண்டாற்பராபரமே. (கஙகூ)

என்றுங்கருணைபெற்றவின்பத்தபோதனர்சொல்
சென்றசென்றதிக்கனைத்துஞ்செல்லும்பராபரமே. (கச0)

ஆடுவதும்பாடுவதுமானந்தமாகநின்னைத்
தேடுவதுநின்னடியார்செய்கைபராபரமே (கசக)

பொங்கியநின்றண்ணருளைப்புட்கலமாப்பெற்றவர்கட்
கெங்கெழுந்தென்ஞாயிறியம்பாய்பராபரமே. (கசஉ)

பாலரொடுபேயர்பித்தர்பான்மையெனநிற்பதுவே
சீலமிகுஞானியர்தஞ்செய்கைபராபரமே. (கசங)

உண்டுடுத்துப்பூண்டிங்குலகத்தார்போற்றிரியுந்
தொண்டர்விளையாட்டேசுகங்காண்பராபரமே (கசச)

கங்குல்பகலற்றதிருக்காட்சியர்கள்கண்டவழி
யெங்குமொருவழியேயெந்தாய்பராபரமே (கசரு)

காயநிலையல்லவென்றுகாண்பாருறங்குவரோ
தூயவருட்பற்றுத்தொடர்வார்பராபரமே (கசசு)

அப்புமுப்பும்போன்றவயிக்கியபரானந்தர்தமக்
கொப்புவமைசொல்லவுமவாயுண்டோபராபரமே. (கசஎ)

சித்தந்தெளிந்துசிவமானோரெல்லோர்க்குந்
தொத்தடிமையானகுடிநான்பராபரமே (கசஅ)

தம்முயிர்போலெவ்வுயிருந்தானென்றுதண்ணருள்கூர்
செம்மையருக்கேவலென்றுசெய்வேன்பராபரமே. (கசகூ)

விண்ணுக்கும்விண்ணாகிமேவுமுனக்கியான்பூசை
பண்ணிநிற்குமாறுபகராய்பராபரமே. (கரு0)

நெஞ்சகமேகோயினினைவேசுகந்தமன்பே
மஞ்சனநீர்பூசைகொள்ளவாராய்பராபரமே. (கருக)

கெட்டவழிபாணவப்பேய்கீழாகமேலான
சிட்டருனைப்பூசைசெய்வார்பராபரமே. (கருஉ)

காலைப்பிடித்துமூலக்கனலைமதிமண்டலத்தின்
மேலெழுப்பிற்றேகம்விழுமோபராபரமே. (கருங)

பஞ்சசுத்திசெய்துநினைப்பாவித்துப்பூசைசெய்தால்
விஞ்சியஞானம்விளங்கும்பராபரமே. (கருச)

அன்பர்பணிசெய்யவெனையாளாக்கிவிட்டுவிட்டா
லின்பநிலைதானேவந்தெய்துமபராபரமே. (௧௫௫)

மூர்த்திதலந்தீர்த்தமுறையாற்றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச்சற்குருவும்வாய்க்கும்பராபரமே (௧௫௬)

விரும்புஞ்சரியைமுதன்மெய்ஞ்ஞானநான்கு
மரும்புமலர்காய்கனிபோலன்றோபராபரமே. (௧௫௭)

தானந்தவந்தருமஞ்சந்ததமுஞ்செய்வர்சிவ
ஞானந்தனையணையநல்லோர்பராபரமே. (௧௫௮)

சொன்னதைச்சொல்லித்துடிக்கின்றவாணவப்பேய்க்
கின்னல்வருவதெந்நாளெந்தாய்பராபரமே. (௧௫௯)

இன்றோவிருவினைவந்தேறியதுநானென்றோ
வன்றேவிளைந்ததன்றோவாறேன்பராபரமே (௧௬௦)

எண்ணமுந்தானின்னைவிடவில்லையெனநூலானமுனமே
பண்ணவினையேதுபகராய்பராபரமே (௧௬௧)

என்னையின்னதென்றறியாவேழைக்குமாகெடுவேன்
முன்னைவினைகூடன்முறையோபராபரமே. (௧௬௨)

அறியாதசெயவினையையையாநீகூட்டுங்
குறியேதெனக்குளவுகூறாய்பராபரமே. (௧௬௩)

என்னைக்கெடுக்கவிசைந்தவிருவினைநோய்
றன்னைக்கெடுக்கத்தகாதோபராபரமே. (௧௬௪)

வல்லமையேகாட்டுகின்றமாமாயைநானொருவ
னில்லையெனின்னெங்கேயிருக்குமபராபரமே. (௧௬௫)

முக்குணத்தாலெல்லாமுளைக்கப்பிரகிருதிக
கிக்குணத்தைநல்கியதாரெந்தாய்பராபரமே. (௧௬௬)

ஆற்றப்படாதுதுன்பமையவெனலென்மனது
தேறப்படாதினியென்செய்வேன்பராபரமே. (௧௬௭)

பூராயமாய்மனதைப்போகவறியாமலையோ
வாராயலந்தேனரசேபராபரமே (௧௬௮)

சினமிறக்கக்கற்றாலுஞ்சித்தியெல்லாம்பெற்றாலு
மனமிறக்கக்கல்லார்க்குவாயேனபராபரமே (௧௬௯)

வாதுக்குவந்தெதிர்த்தவல்லவரைப்போற்பாழ்த்தமன
மேதுக்குக்கூத்தாடுதெந்தாய்பராபரமே. (௧௭௦)

சூதாகோர்போற்றுவண்டு துவண்டுமனம்
வாதாடினென்னபலன்வாய்க்கும்பராபரமே. (௧௭௧)

கொள்ளித்தேள்கொட்டிக்குதிக்கின்றபேய்க்குரங்காய்க்
கள்ளமனந்துள்ளுவதென்கண்டாய்பராபரமே. (௧௭௨)

வந்ததையும்போனதையுமனத்துலைவைத்துப்பாராதிருந்தாற
சிந்தையிதமகிதஞ்சேருமபராபரமே. (௧௭௩)

ஏறுமயிர்ப்பாலமுனையாயிருந்தவிடயங்களொருப்
பாறெனவுநன்றுவறிந்தேன்பராபரமே. (௧௭௪)

பொறிவழியேயேழைபொறியாயுழலவதுநின்
னறிவினவிதித்தவிதியாமோபராபரமே. (௧௭௫)

பாசசாலங்களெல்லாம்பறறுவிடஞானவைவாள்
வீசநாளெந்நாளவிளம்பாயபராபரமே. (௧௭௬)

எந்தவுடலேனுமெடுத்தவுடனல்லதென்று
சிந்தைசெயவந்ததிறஞ்செப்பாயபராபரமே. (௧௭௭)

பொய்யெலாமொன்றாப்பொருத்திவைத்தபொய்யுடலை
மெய்யென்றுனமெய்யாய்விடுமோபராபரமே. (௧௭௮)

மின்னனையபொய்யுடலைமெய்யென்றுநம்பியையோ
நின்னைமறக்கைநெறியோபராபரமே (௧௭௯)

நித்தியமொன்றில்லாதநீர்க்குமிழிபோன்றவுடற
கிததனைதானறனபமுணடோவெனனேபராபரமே. (௧௮0)

தேகமிறுமென்றுசடர்தேயபுவதெனனித்திரையி
னாகமறிந்தாற்பயநதானுணடோபராபரமே. (௧௮௧)

ஏதைச்சுமையாவெடுப்பாரெடுத்தவுடற்
சேதமுறின்யாதுபினனைசெலவுமபராபரமே (௧௮௨)

தோறபாவைநாலாட்சுமையாகுஞ்சீவனெனறிங
காப்பாலெடுத்ததெவராலேபராபரமே. (௧௮௩)

ஞாலத்தைமெய்யெனவேநம்பிநம்பிநாளுமென்றன்
காலத்தைப்போக்கியென்னகண்டேன்பராபரமே. (௧௮௪)

பொய்யுலகவாழ்க்கைப்புலைச்சேரிவாதனைநீ
மெய்யருளின்மூழ்கின்விடுமேகாண்பராபரமே. (௧௮௫)

நூலேணிவிண்ணேறநூற்குப்பரித்திவைப்பார்
போலேகருவிநன்னூற்போதம்பராபரமே. (௧௮௬)

சின்னஞ்சிறியார்கள்செய்தமணற்சோறதனையொக்கு
மன்னுநகலைஞானமாகாக்கம்பராபரமே. (௧௮௭)

வாசகஞானத்தால்வருமோசுகம்பாழ்த்த
பூசலென்றுபோமோபுகலாய்பராபரமே. (௧௮௮)

கேட்டதையேசொல்லுங்கிளிபோலநின்னருளி
னூட்டமின்றிவாய்ப்பேச்சன்றோபராபரமே (௧௮௯)

வெளியாயருவில்லவிரவுமனபாதேக
வொளியாய்ப்பிறங்கியதுமுண்டோபராபரமே. (௧௯௦)

காலமொருமூன்றுங்கருத்திலுணர்ந்தாலுமதை
ஞாலத்தனக்குறையார்நலமேலாபராபரமே. (௧௯௧)

கொல்லாவிரதமொன்றுகொண்டவரேநல்லோர்மற்
றல்லாதாரியாரோவறியேன்பராபரமே. (௧௯௨)

இல்லாதகாரியத்தையிச்சித்துச்சிந்தைவழி
செல்லாமைநல்லோர்திறங்காண்பராபரமே (௧௯௩)

ஏதுவந்ததுமேதொழிந்ததுமென்னறியானென்னார்கள்
போதநிலைகண்டபுலத்தோர்பராபரமே. (௧௯௪)

ஆயிரஞ்சொன்னாலுமறியாதவஞ்சநெஞ்சப்
பேயரொடுகூடிற்பிழைகாண்பராபரமே (௧௯௫)

மாயமயக்கொழிந்தார்மற்றொன்றைநாடுவரோ
நேயவருணிலையினிற்பார்பராபரமே. (௧௯௬)

நித்திரையிற்செத்தபிணநேருமுடற்கிச்சைவையாச்
சுத்தர்களேநல்லதுறவோர்பராபரமே. (௧௯௭)

என்னெஞ்சமேனுமிரங்குமேநின்னருட்குக்
கன்னெஞ்சருமுளரோகாட்டாய்பராபரமே (௧௯௮)

மந்தவறிவாகியின்பமவாயாதிருந்தலைந்தாற்
சிந்தைமயங்காதோவெனசெய்வேன்பராபரமே. (௧௯௯)

தேடினேன்றிக்கனைத்துந்தெண்டனிட்டேன்சிந்தைநைந்து
வாடினேனென்மயக்கமாற்றாய்பராபரமே. (௨௦௦)

மடிமையெனுமொன்றைமறுத்தன்றோவென்னை
யடிமைகொள்ளல்வேண்டுமரசேபராபரமே. (௨௦௧)

காலயந்திரவின்பகலாறுபயமென்றெழுந்த
மாலவளர்த்தனையேவாழிபராபரமே. (௨௦௨)

நீர்ப்புற்புதமாய்நினைவருட்கேநின்றழியப்
பார்ப்பதல்லால்வேறுமொன்றைப்பாரேன்பராபரமே. (உ0௩)

நீர்க்குமிழிபோலெனனினைவுவெளியாய்க்கரையப்
பார்க்குமிடமெல்லாமெனபார்வைபராபரமே. (உ0௪)

ஆடியோய்ப்பம்பரம்போலாசையுடனெங்குமுனைத்
தேடியோய்ந்தேனென்னசெய்வேன்பராபரமே. (உ0௫)

வேதாந்தஞ்சித்தாந்தம்வேறெனஞானிகளிக்கு
நாதாந்தமோனநலமேபராபரமே (உ0௬)

ஆனந்தமானநினையன்றியொன்றையுன்னாத
மோனந்தமியேற்குமுதவிபராபரமே. (உ0௭)

ஏதுக்குமுன்னைவிடவில்லையென்றலென்கருத்தைச்
சோதிக்கவேண்டாநான்சொன்னேன்பராபரமே. (உ0௮)

மூர்த்தியிலுந்தேகமிசைமூவிதமாஞ்சித்திபெற்றோ
ரெத்தனைபேரென்றுரைப்பதெந்தாய்பராபரமே. (உ0௯)

நீயன்றிநானார்நினைவாரென்னெஞ்சகமார்
தாயன்றிசூலுமுண்டோசாற்றாய்பராபரமே. (உ௧0)

அங்கமேநின்வடிவமானசுகாகூப்பிடநீ
யெங்குமேனென்றதென்னேபராபரமே (உ௧௧)

தொள்ளைவெள்ளத்தண்ணருண்மேற்கொண்டுசுழித்தார்த்திழுத்தா
ற், கள்ளமனக்கப்பலெங்கேகாணும்பராபரமே (உ௧உ)

ஏகக்கலையுங்கற்றுணர்ந்தோமென்றவர்க்குஞ்சமயமதஞ்சொல்
வக்கணையாலின்பமவருமோபராபரமே. (உ௧௩)

கல்லெறியப்பாசிகலைந்துநன்னீர்காணுநல்லோர்
சொல்லுணரின்ஞானம்வந்துதோன்றும்பராபரமே. (உ௧௪)

நின்னையுணர்ந்தோர்கடைநிந்தித்தபேயறிஞ
ரென்னகதிபெறுவாரெந்தாய்பராபரமே. (உ௧௫)

என்னறிவாலென்னலமற்றேயெங்கிருந்துபார்க்கினுநின்
சன்னிதியாநீபெரியசாமிபராபரமே. (உ௧௬)

சோற்றுத்துருத்திசுமைசுமப்பக்கைபிதுங்கக்
காற்றைப்பிடிக்கலைந்தேன்கண்டாய்பராபரமே (உ௧௭)

உள்ளபடியொன்றையுணர்கினவர்க்குள்ளூறுமாயக்
கள்ளமின்றியன்பாய்க்களிப்பேன்பராபரமே. (உ௧௮)

அடுத்தவியல்பாகவொன்றையான்பகர்வதல்லாற்
றொடுததொன்றையானவேண்டிசசொலலேன்பராபரமே. ௨௧௯)

உள்ளமறியாதொருவரொன்றையுன்னிப்பேசிலேயோ
துளளியிளஙகனறுயததுடிப்பேனபராபரமே. (௨௨0)

எல்லாருமின்புற்றிருக்கநினைப்பதுவே
யலலாமல்வேறொன்றறியேன்பராபரமே. (௨௨௧)

மூன்றுண்மெய்ஞ்ஞானமுனிவாதவமீட்டுதல்போ
லிநநாளிறகாணவெனககிசசைபராபரமே (௨௨௨)

கனமமெனபதெலலாஙகரிசறவேமெய்ஞ்ஞான
தனமநிலைசாநததனபாதனமைபராபரமே. (௨௨௩)

குணடுயிலாதென்னறிவினகண்ணூடேசாட்சிபெற
மணடியபேரொளிநீவாழிபராபரமே. (௨௨௪)

நானெனதன்மையென்றுநாடாமனுடவினப
வானுகினறனைநீவாழிபராபரமே (௨௨௫)

அசததாடணுவணுவாயணடமெலலாந்தானுய
மகததாகினறனைநீவாழிபராபரமே (௨௨௬)

காரமாயகாபபவறைகககண்ணூடுமெனகணணே
வாரமவைததுககாததனைநீவாழிபராபரமே. (௨௨௭)

பூரந்தோராதநதேசமெனபாரபூமியையபோராடி
யிரநதோருந்தமமதெனபாரெனனேபராபரமே (௨௨௮)

மூாததியெல்லாம்வாழியெஙகண்மோனகுருவாழியருள
வாாததையெனறுமவாழியன்பாவாழிபராபரமே (௨௨௯)

சொல்லும்பொருளுந்தொடராவருணிறைவிற்
செல்லுமபடிககருணைசெயதாய்பராபரமே (௨௩0)

இறைவரைக்குளளாகவெண்ணரியசிததிமுத்தி
பெற்றவாகளெததனைபோபேசாய்பராபரமே. (௨௩௧)

நாடுசகருநிசானுட்டியபாளயமு
மீடுசெயுமோமுடிவிலெநதாயபராபரமே. (௨௩௨)

தேடுந்திரவியமுஞ்சோநதமணிப்பெடடகமுங
கூடவருநதுணையோகூறாய்பராபரமே. (௨௩௩)

தேடாததேடினரேசெங்கைத்துலாககோல்போல்
வாடாசசமநிலையிலவாழவாாபராபரமே. (௨௩௪)

நீராய்க்கசிந்துருகிநெட்டுயிர்த்துநின்றேனைப்
பாராததென்னோபகராயபராபரமே. (உகரு)

உள்ளபொருளாவியுடன்மூன்றுமன்றேதான்
கொள்ளைகொண்டநீயென்குறைதீர்பராபரமே. (உகசு)

ஆழ்ந்தாயேயிவ்வுலகிலல்லலெல்லாந்தீர்த்தருளால்
வாழ்ந்தாயேயென்றனைநீவாழிபராபரமே. (உகஎ)

தாராவருளோயெல்லாந்தந்தெனையுநின்னருளில்
வாராயோவென்றனைநீவாழிபராபரமே (உகஅ)

ஆசையுன்மீதல்லாலருளறியவேறுமொன்றிற
பாசமவையேனினைகருணைப்பாஙகாறபராபரமே. (உகக)

ஆதியந்தீகுருவாயாண்டதலலாணினையன்றிப
போதனையுமுண்டோபுகலாயபராபரமே. (உச0)

தானாகவந்துதடுத்தாண்டெனையின்ப
வானாகசசெயதவினபவானேபராபரமே (உசக)

பற்றறறிருககுநெறிபற்றிற்கடனமலையுஞ்
சுற்றநினைககுமனனுசொனனேனபராபரமே. (உசஉ)

படிப்பற்றுககேள்வியறறுபபற்றற்றுசசிந்தைத
துடிபபறறாககனறேசுகஙகாணபராபரமே. (உசங)

சத்தாகிநினறோசடஙகளிலிஙகமெனன
வைததாருமுணடேயெனவாழ்வேபராபரமே. (உசச)

சித்தநிருவிகறபஞ்சேர்ந்தாருடற்றீபம
வைததகாப்பூரமபோலவயஙகுமபராபரமே. (உசரு)

ஆதிகாலததிலெனையாணடனையேயிப்பானீ
போதியெனினெஙகேநானபோவேனபராபரமே. (உசசு)

நாவழுததுஞ்சொனமலரோநாளுஞ்சிககுமபொனமலரோ
தேவையுனககினனதெனறுசெபபாயபராபரமே (உசஎ)

இன்னறரும்பாகாயககருபபுவட்டாய்ககற்கணடா
யின்னமுதாயெனனுளிருந்தாயபராபரமே. (உசஅ)

சிற்பரமேதறபரமேதெய்வசசுருதிசொன்ன
வறபுதமேயனபேயறிவேபராபரமே. (உசகூ)

அறிவிப்பானீயென்றாலைமபுலனகடந்தந்
நெறிநிற்பார்யாரேநிகழ்ததாயபராபரமே. (உரு0)

அந்தக்கரணமெனுமாகாதபேய்களெனை
வந்துபிடித்தாட்டவழக்கோபராபரமே. (௨௫௧)

ஐவரொடுங்கூடாமலநந்தரங்கசேவைதந்த
தெய்வவறிவேசிவமேபராபரமே. (௨௫௨)

அருளாகிநின்றசுகமாகாமலையோ
விருளாகிநிற்கவியல்போபராபரமே (௨௫௩)

அன்பரெல்லாமின்பமருந்திடவுமியானொருவன்
றுன்புறுதனன்றோநீசொல்லாய்பராபரமே. (௨௫௪)

சந்ததமுநின்கருணைசாற்றுவதல்லால்வேறு
சிந்தையறியேனுனசித்தம்பராபரமே. (௨௫௫)

நானென்னுங்குளறுநாட்டத்தாலென்னைவிட்டுப்
போனாலுமுன்னைவிட்டுப்போகேன்பராபரமே. (௨௫௬)

இக்காயம்பொய்யென்றேரிட்டத்துனக்கபயம்
புகாதாருண்டோபுகலாய்பராபரமே. (௨௫௭)

தானுதலபூரணமேசாருமிடமுண்டுயிரும்
வானாதியுமொழுங்காய்மன்னுமபராபரமே. (௨௫௮)

உன்னுமனங்கர்ப்பூரவண்டைபோலேகரைய
மின்னுமானந்தவிளக்கேபராபரமே. (௨௫௯)

நாட்பட்டலைந்தந்துக்கமெல்லாந்திரவுனக்
காட்பட்டுந்துன்பமெனக்காமோபராபரமே. (௨௬௦)

பாவிபடுங்கணசலக்கம்பாராதத்துமிரங்காதிருந்தா
லாவிக்குறுதுணையாராயாய்பராபரமே. (௨௬௧)

நின்னிறைவேதாரகமாய்நின்றுசுகமெய்தாம
லென்னிறைவேபாவித்தேனென்னேபராபரமே. (௨௬௨)

நின்னைச்சரண்புகுந்தானீக்ககல்வேண்டுமெல்லா
மென்னைப்புறமவிடுதலென்னேபராபரமே. (௨௬௩)

பாருறுதுன்பமெல்லாம்வந்துழைத்தானின்செவியி
லேறுதவாறேதியம்பாய்பராபரமே. (௨௬௪)

விஞ்சுபுலப்பாடனைத்தும்வீறுதன்பஞ்செய்யவந்த
வஞ்சுபுலவேடருக்குமாற்றேன்பராபரமே. (௨௬௫)

கன்னங்கரியநிறக்காமாதிராக்ஷசப்பேய்க்
கென்னையிலக்காகவைத்ததென்னேபராபரமே. (௨௬௬)

சித்திநெறிகேட்டல்செகமயக்கஞ்சென்மமற
முத்திநெறிகேட்டன்முறைகாண்பராபரமே. (உசுஎ)

சிந்தைசிதையச்சிதையாதவானந்த
மெந்தவகையாலேவந்தெய்தும்பராபரமே. (உசுஅ)

கூர்த்தவறிவாலறியக்கூடாதெனக்குரவன்
றோதத்தபடிதானேதிரிந்தேன்பராபரமே. (உசுக)

பத்தருந்துய்பரசுகமயமானருந்த
வெத்தனைநாள்செலுமியம்பாய்பராபரமே. (உஎ0)

தீரத்திறத்தரவுசோராமலிவ்வுலகிற்
பாரத்தனம்பேசல்பண்போபராபரமே. (உஎக)

இந்தவெளியினையுண்டேப்பமிடப்பேரறிவாந்
தந்தவெளிக்கேவெளியாய்ச்சார்ந்தேன்பராபரமே. (உஎஉ)

உணர்த்துமுனைநாடாதுணர்ந்தவையேநாடி
வினைக்குறுமென்மனமேழைமைதானென்னேபராபரமே. (உஎங)

உண்டுபோலின்றுமுலகைத்திரமென்னவுட்
கொண்டோரைப்பெற்றபலன்கூறாய்பராபரமே (உஎச)

உள்ளபடியாதுமெனவுற்றுணர்ந்தேனக்கணமே
கள்ளமனம்போனவழிகாணேன்பராபரமே (உஎரு)

சித்தமவுனஞ்செயல்வாக்கெலாமவுனஞ்
சுத்தமவுனமென்பாற்றோன்றிற்பராபரமே. (உஎசு)

எண்ணிலபலகோடியுயிரெத்தனையோவத்தனைக்குங்
கண்ணிறகலந்தவருட்கண்ணேபராபரமே. (உஎஎ)

எனக்கினியாருன்போலுமில்லையென்றால்யானு
முனக்கினியனாகவுள்ளேன்பராபரமே. (உஎஅ)

அண்டபிண்டங்காணெனக்குமப்புறமுமொன்றாக்
கண்டவெனைநீகலந்தகாலம்பராபரமே. (உஎக)

எத்தனையோகோடியெடுத்தெடுத்துச்சொன்னாலுஞ்
சித்தமிரங்கிலையென்செய்வேன்பராபரமே. (உஅ0)

அன்றந்தரால்வருக்குமற்புதமாநீயுரைத்த
தொன்றந்தவார்த்தையெனக்குண்டோபராபரமே. (உஅக)

அப்பனென்றுமன்னையென்றுமாரியனென்றுமுன்னையே
செப்புவதுமுன்னிலையின்சீர்காண்பராபரமே. (உஅஉ)

கூடுங்கனமுமந்தக்காலர்வரும்போதெதிர்த்து
வெட்டுந்தளமோவிளம்பாய்பராபரமே. (௨௮௩)

பேசாதமோனநிலைபெற்றன்றோநின்னருளாம்
வாசாமகோசரந்தானவாய்க்கும்பராபரமே. (௨௮௪)

கூற்றுங்கேட்டாலுங்காயமழியாதசித்தி
பெற்றாலுமின்பமுண்டோபேசாய்பராபரமே (௨௮௫)

கண்டவடிவெல்லாங்கரைக்கின்றவஞ்சனம்போ
லண்டமெல்லாநின்னருளேயன்றோபராபரமே (௨௮௬)

தன்செயலாலொன்றுமிலைதானென்றுணர்பாவி
நின்செயலாய்நில்லாநிலைவேண்பராபரமே (௨௮௭)

கொலைகளவுகட்காமங்கோபமவிட்டாலன்றோ
மலையிலக்காநின்னருடானவாய்க்கும்பராபரமே. (௨௮௮)

தன்னையறியாதுசகந்தானாயிருந்துவிட்டா
லுன்னையறியவருளுண்டோபராபரமே (௨௮௯)

ஒன்றிரண்டென்றுணர்வுணர்வுகொடுத்துள்ளபடி
யென்றுமெனையையாயிறையேபராபரமே. (௨௯௦)

கருத்துமடியார்களுள்ளங்காணவெளியாகுந்
துரியநிறைவானசுகமேபராபரமே. (௨௯௧)

பொய்குவித்தநெஞ்சனருட்பொற்பறிந்துநிற்கவுனைத்துங்
கைகுவித்துநிற்பதெந்தக்காலம்பராபரமே. (௨௯௨)

அத்துவிதமானவுயிர்க்கப்பவனுபவமே
சுத்தநிலையந்நிலையாச்சொல்வாய்பராபரமே. (௨௯௩)

வைத்தசுவாலமபின்மணம்போமோமாயையினோக்
கெத்தனைபோதித்துமென்னெந்தாய்பராபரமே. (௨௯௪)

பூட்டற்றதேகமற்றுப்போகுமுன்னேநின்னருளைக்
காட்டத்தகாதோவெனக்கண்ணேபராபரமே. (௨௯௫)

சொல்லிற்பதாகளைந்துசொன்னமுடிவுகாணுநர்
கொல்லிற்பதாபோல்நிற்பாய்பராபரமே. (௨௯௬)

அழுக்காற்றுநெஞ்சமழுங்கியபுன்மாக்க
ளிழுக்காற்றுவின்பநலமெய்தார்பராபரமே. (௨௯௭)

தேகாதிபொய்யெனவேதேர்ந்தவுபசாந்தருக்கு
மோகாதியுண்டோமொழியாய்பராபரமே. (௨௯௮)

சாதனையெல்லாமவிழ்த்தற்போதங்காட்டாதோ
போதனைநீநல்குவதெப்போதோபராபரமே. (௧௯௯)

ஒன்றுமறியாவிருளாமுள்ளமடைத்தவெனக்
கென்றுகதிவருவதெந்தாய்பராபரமே (௨௦௦)

சிந்திக்குந்தோறுமென்னுடசிறைக்கமாயூமறாதிப்
புத்திகுணினறவருடபொறுப்பேபராபரமே (௨௦௧)

என்றுமடைந்தோர்கட்கிரங்காக்குறிப்பபிழைத்து
கன்றையுதைத்தகாலிகதைகாண்பராபரமே (௨௦௨)

குற்றங்குறையகுணமேலிடவருளை
யுற்றவரோயாவிசக்குறவாயபராபரமே. (௨௦௩)

ஒருநாயாலவாயககுழுணைமைக்கோரநதநாலகோடிய
பேருணையாறபேசிலென்னபெருமைபராபரமே. (௨௦௪)

சொல்லுஞ்சமயநெறிச்சுற்றுக்குளேசுழலு
மல்லலொழிவதெநறகையாபராபரமே. (௨௦௫)

பிடித்தவையேஸ்தாபிச்சுயம்பேராணவத்தை
யடித்துத்துரத்தவல்லாரார்காண்பராபரமே. (௨௦௬)

நெஞ்சத்தாலினைவினைக்குநினைவுடையா
ராசைக்கடலிலழுந்தார்பராபரமே (௨௦௭)

கள்ளாதுசட்டினைவுங்காரியமோநாவொருசொற
கொள்ளாதேதாவுமனறேகூறுயபராபரமே. (௨௦௮)

சென்றவிடமெல்லாந்திருவருளேதாரகமா
நின்றவாகேயானந்தகிடைபராபரமே. (௨௦௯)

நீட்சிதுறக்கிலலாநிதயசுகாரம்பச்சக்
காட்சியாழுனைவந்துசாரந்தெனபராபரமே (௨௧௦)

வாஞ்சித்ததுவமாய்மனனிநினறகாரணநீ
நாஞ்சுகிறபதெந்தநாளோபராபரமே (௨௧௧)

காட்டத்திலங்கிச்சையவந்தாலென்னவுன்று
நாட்டத்தினூடுவந்தடபேபராபரமே. (௨௧௨)

நித்திரையாயத்தானேநினைவயாநதானித்தசித்தஞ்
செத்தபிழைப்பானதெங்களசெய்கைபராபரமே. (௨௧௩)

இன்பநிட்டையெயதாமல்யாதெனினுஞ்சென்றுமனந்
துன்புறதல்வன்பிறவித்துக்கம்பராபரமே. (௨௧௪)

பொய்யகலமெய்யானபோதநிலைகண்டோர்க்கோ
ரையமிலையையமிலையையாபராபரமே. (௯௧௫)

மந்திரத்தையுன்னிமயங்காதெனக்கினியோர்
தந்திரத்தைவைக்கத்தகாதோபராபரமே. (௯௧௬)

வினைகருணைபூத்தசெனனமோவியுயிர்க்குயிராயத்
தனைகருணைதோன்றவருடாய்நீபராபரமே. (௯௧௭)

தன்மயமாய்நின்றநிலைதானேதானாகிநின்றா
னின்மயமாமெல்லாநிகழும்பராபரமே. (௯௧௮)

ஏங்கியிடையுநெஞ்சவேழைமையைநீவாவென்றே
பாங்குபெறச்செய்வதென்றோபராபரமே. (௯௧௯)

ஆண்டநின்னைநீங்காவடிமைகளியாமாணவத்தைப்
பூண்டதென்னசன்மம்புகலாய்பராபரமே. (௯௨0)

எங்கணுநீயென்றுவிருந்தபடியெய்தாம
லங்குமிங்குமென்றலையலாமோபராபரமே (௯௨௧)

கற்குமதுவுண்டுகளிக்கக்கலவாவின்னருளி
னிற்குமதுதந்ததுண்டோநீதானபராபரமே. (௯௨௨)

அண்டபகிரண்டமறியாதவினைவடிவைக்
கண்டவரைக்கண்டாற்கதியாம்பராபரமே. (௯௨௩)

கலக்கமுறநெஞ்சைக்கலக்கித்திரும்பத்
துலக்குபவனீயலையோசொல்லாய்பராபரமே. (௯௨௪)

சிந்தையுமெனபோலச்செயலற்றடங்கிவிட்டால்
வந்ததெலாநின்செயலாவாழ்வேன்பராபரமே (௯௨௫)

பந்தமெலாந்தீரப்பரஞ்சோதிநீகுருவாய்
வந்தவடிவைமறவேன்பராபரமே. (௯௨௬)

தானந்தமானசகசநிருவிகற்ப
வானந்தநிட்டையருளையாபராபரமே. (௯௨௭)

அல்லலெல்லாந்தீரவெனக்கானந்தமாகவொரு
சொல்லையென்பால்வைத்ததையென்சொல்வேன்பராபரமே. (௯௨௮)

சிந்தைமயக்கமறச்சின்மயமாய்நின்றவுன்னைத்
தந்தவுணக்கெனையேயுநான்றந்தேன்பராபரமே. (௯௨௯)

மைகாட்டுமாயைமயக்கமறநீகுருவாய்க்
கைகாட்டவுங்கனவுகண்டேன்பராபரமே. (௯௩0)

மால்வைத்தசிந்தைமயக்கறவென்சென்னிமிசைக்
கால்வைக்கவுங்கனவுகண்டேன்பராபரமே. (௩௩௧)

மண்ணுமாயையெல்லாமாண்டுவெளியாகவிரு
கண்ணாரவுங்கனவுகண்டேன்பராபரமே. (௩௩௨)

பண்ணீர்மையாலேமயங்காதுன்கையாலென்
கண்ணீர்துடைக்கவுநான்கண்டேன்பராபரமே. (௩௩௩)

உள்ளதுணராவுணர்விலிமாபாவியென்றே
மெள்ளமெள்ளக்கைநெகிழவிட்டாயபராபரமே (௩௩௪)

எல்லாநினதுசெயலென்றெண்ணுமெண்ணமுநீ
யல்லாலெனக்குளதோவையாபராபரமே. (௩௩௫)

பந்தமறக்கிருபைப்பற்றொழிந்தேனென்றுளறு
மிந்தமயக்கமெனக்கேன்பராபரமே. (௩௩௬)

காட்சியெல்லாங்கண்ணைவிடக்கண்டதுண்டோயானினுக்கு
மாட்சியுனதருளேயன்றோபராபரமே. (௩௩௭)

எட்டுத்திசையுமொன்றாயின்பமாய்நின்றவுன்னை
விட்டுப்பிரியவிடம்வேறோபராபரமே. (௩௩௮)

பிறியாதுயிர்க்குயிராய்ப்பின்னமறவோங்குஞ்
செறிவேயறிவேசிவமேபராபரமே. (௩௩௯)

ஏதேதுசொன்னாலுமெள்ளளவுநீயிரங்காச்
சூதேதெனக்குளவுசொல்லாய்பராபரமே. (௩௪0)

கற்பனையாப்பாடுகின்றேன்கண்ணீருங்கம்பலையுஞ்
சொற்பனத்துங்காணேனென்சொல்வேன்பராபரமே. (௩௪௧)

வன்பொன்றுநீங்காமனதிறப்பமாறுப்பே
ரன்பொன்றும்போதுமெனக்கையாபராபரமே. (௩௪௨)

ஏதுந்தெரியாவெளியேனைவாவெனநின்
போதநிலைகாட்டிற்பொருந்தாதோபராபரமே. (௩௪௩)

ஓராமலெல்லாமொழிந்தேற்குன்றெய்வவரு
டாராதிருக்கத்தகுமோபராபரமே. (௩௪௪)

மோனந்தருஞானமூட்டியெனக்குவட்டா
வானந்தவாழ்க்கையருளாய்பராபரமே. (௩௪௫)

வாடுமுகங்கண்டெனைவாடாமலேகாத்த
நீடுங்கருணைநிறைவேபராபரமே. (௩௪௬)

புந்தியினானின்னடியைப்போற்றுகின்றமெய்யடியார்
சிந்தையிற்போய்நின்றறியானம்பராபரமே. (௫௪௭)

உனக்குவமையாக்கருணையுள்ளவரும்வன்மைக
கெனக்குவமையானவருமில்லைபராபரமே. (௫௪௮)

தாயிருந்தும்பிள்ளைதளர்ந்தாற்போலெவ்விடத்து
நீயிருந்துநான்றளர்ந்துநின்றேன்பராபரமே (௫௪௯)

வாயாற்கிணறுகெட்டவாறேபோலவாய்பேசிப்
பேயனுக்கின்பமுண்டோபேசாய்பராபரமே. (௫௫௦

பாவமென்றாலேதும்பயமினிச்செய்யவிந்தச்
சீவனுக்காபோதந்தெரிந்ததாபராபரமே. (௫௫௧)

இன்பநிருவிகற்பமின்றேதாவன்றேனிலோ
அன்பம்பொறுப்பரிதுசொன்னேனேபராபரமே. (௫௫௨)

கற்குநிலைகற்றார்கருவியவிழாதருளாய
நிற்குநிலைகற்பதுவேந்தம்பராபரமே. (௫௫௩)

காச்சச்சுடாவிடும்பொற்கட்டிபோனின்மலமாய்ப்
பேச்சற்றவரேபிறவாபராபரமே. (௫௫௪)

பற்றொழிந்துசிந்தைப்பதைப்பொழிந்துதானேதா
னற்றிருப்பதென்றைக்கமைப்பாய்பராபரமே. (௫௫௫)

உருவெளிதான்வாதவூருத்தமர்க்கல்லாலினமுந
குருவழிநின்றார்க்குமுண்டோகூறாய்பராபரமே. (௫௫௬)

தேகமியாதேனுமொருசித்திபெறச்சீவன்முத்தி
யாகுநெறிநல்லநெறியையாபராபரமே. (௫௫௭)

உலகநெறிபோற்சடலமோயவுயிர்முத்தி
யிலகுமெனல்பந்தவியல்போபராபரமே (௫௫௮)

பரமாப்பரவெளியாப்பார்ப்பதலானமற்றெவர்க்குந்
திரமேதுமில்லைநின்றதேர்ந்தேனபராபரமே. (௫௫௯)

தேடுவேனின்னருளைத்தேடுமுனனேயெய்திண்ட
மாடுவேனானந்தமாவேன்பராபரமே. (௫௬௦)

உள்ளங்குழையவுடல்குழையவுள்ளிருந்த
கள்ளங்குழையவென்றுகாண்பேன்பராபரமே. (௫௬௧)

பட்டப்பகல்போலப்பாழ்த்தசிந்தைமாளினெல்லாம்
வெட்டவெளியாகவிளங்குட்பராபரமே. (௫௬௨)

பார்க்கினணுப்போற்கிடந்தபாழ்ஞ்சிந்தைமாளினென்னை
யார்க்குச்சரியிடலாமையாபராபரமே. (௩௬௩)

பாட்டுக்கோவன்பினுக்கோபத்திக்கோவன்பாதங்க
ணீட்டுக்கெல்லாங்குறிக்கின்றாய்பராபரமே (௩௬௪)

மூத்தாந்தவித்தேமுளைக்குநிலமாயெழுந்த
சித்தாந்தமார்க்கச்சிறப்பேபராபரமே. (௩௬௫)

உன்னுவெளியாயுறங்காதபேருணர்வா
யென்னுவிக்குள்ளேயிருந்தாய்பராபரமே (௩௬௬)

தத்துவமெல்லாமகன்றதன்மையர்க்குச்சின்மயமா
நித்தமுத்தசுத்தநிறைவேபராபரமே. (௩௬௭)

உள்ளக்கொதிப்பகலவுள்ளுள்ளேயானந்த
வெள்ளமலாக்கருணைவேண்டுமேபராபரமே. (௩௬௮)

என்னைப்புரப்பதருளின்கடனுமென்கடனு
நின்னிற்பணியறவேநிற்கைபராபரமே (௩௬௯)

தானேயாநன்னிலையைத்தந்தவருளானந்த
வானேமனாதீதவாழ்வேபராபரமே. (௩௭௦)

மண்ணுதிபூதமெல்லாம்வைத்திருந்தநின்னிறைவைக்
கண்ணுரக்கண்டுகளித்தேன்பராபரமே (௩௭௧)

அறியாமையீதென்றறிவித்தவன்றேதான
பிறியாவருணிலையும்பெற்றேன்பராபரமே. (௩௭௨)

நீதெனவுநானெனவுந்தேர்ந்துநான்றேர்ந்தபடி
யேதுநடக்கவொட்டாதென்னேபராபரமே. (௩௭௩)

கண்டவறிவகண்டாகாரமெனமெய்யறிவிற்
கொண்டவர்க்கேமுத்திகொடுப்பாய்பராபரமே. (௩௭௪)

ஈறாகவல்வினைநானென்னுமலினபசுகம்
பேரும்படிக்கடிமைபெற்றேன்பராபரமே. (௩௭௫)

பெற்றாரனுபூதிபேசாதமோனநிலை
கற்றாருனைப்பிரியாகண்டாய்பராபரமே (௩௭௬)

நீயேநானென்னறிவினைப்புமறப்புறந்த
தாயேயனையவருடந்தாய்பராபரமே. (௩௭௭)

சஞ்சலமற்றெல்லாநீதானென்றுணர்ந்தேனென்
னஞ்சலியுங்கொள்வாயரசேபராபரமே. (௩௭௮)

பூதமுதலாதவரைப்பொய்யென்றமெய்யரெல்லாங்
காதலித்தவின்பக்கடலேபராபரமே. (௩௭௯)

வாக்குமனமொன்றுபட்டவார்த்தையல்லால்வெவ்வேறாய்ப்
போக்குடையவார்த்தைபொருந்தேன்பராபரமே. (௩௮0)

வன்மையின்றியெல்லாமதித்துணர்வாய்க்காகெடுவேன்
றன்மையொன்றுந்தோயத்தடையோபராபரமே. (௩௮௧)

பத்தர்சித்தர்வாழிபரிபக்குவர்கள்வாழிசெங்கோல்
வைத்தவர்கள்வாழிகுருவாழிபராபரமே. (௩௮௨)

கல்லாதேனானாலுங்கற்றுணர்ந்தமெய்யடியார்
சொல்லாலேநின்னைத்தொடர்ந்தேன்பராபரமே. (௩௮௩)

சொல்லிறப்பச்சற்குருவாய்த்தோன்றிச்சுகங்கொடுத்த
நல்லுரைக்கேசொந்தவடிமைநான்காண்பராபரமே. (௩௮௪)

முத்திக்குவித்தானமோனக்கரும்புவழித்
தித்தித்திடவிளைந்ததேனேபராபரமே. (௩௮௫)

நித்திரையும்பாழ்த்தநினைவுமற்றுநிற்பதுவோ
சுத்தவருணிலைநீசொல்லாய்பராபரமே. (௩௮௬)

மண்ணுமறிகடலுமற்றுளவுமெல்லாமுன்
கண்ணிலிருக்கவுநான்கண்டேன்பராபரமே (௩௮௭)

பூட்டிவைத்துவஞ்சப்பொறிவழியேயென்றனைநீ
யாட்டுகின்றதேதோவறியேன்பராபரமே. (௩௮௮)

பொய்யுணவாயிந்தப்புழுக்கூட்டைக்காத்திருந்தே
னுய்யுமவகையுமுளதோபராபரமே. (௩௮௯)

பைங்கிளிக்கண்ணி.

அந்தமுடனாதியளவாமலென்னறிவிற்
சுந்தரவான்சோதிதுலங்குமோபைங்கிளியே. (௧)

அகமேவுமண்ணனுக்கென்னல்லலெல்லாஞ்சொல்லிச்
சுகமானநீபோய்ச்சுகங்கொடுவாபைங்கிளியே. (௨)

ஆவிக்குளாவியெனுமற்புதனார்சிற்சுகந்தான்
பாவிக்குங்கிட்டுமோசொல்லாய்நீபைங்கிளியே. (௩)

ஆருமறியாமலென்னையந்தரங்கமாகவந்து
சேரும்படியிறைக்குச்செப்பிவாபைங்கிளியே. (௪)

ஆறானகண்ணீர்க்கென்னங்கபங்கமானதையுங்
கூறாதவெதனனோகுதலைமொழிபைங்கிளியே. (௫)

இன்பருளவாடையழககேறுமெமக்கணணலசுத்த
வம்பரமாமாடையளிப்பானோபைங்கிளியே. (௬)

உன்னாமொன்றிரண்டென்றோராமல்வீட்டுநெறி
சொன்னான்வரவும்வகைசொலலாயநீபைங்கிளியே. (௭)

ஊருமிலாபேருமிலாருற்றார்பெற்றாருடனே
யாருமிலாரெனனையறிவாரோபைங்கிளியே. (௮)

ஊனைப்பாராமலெனகருள்ளகத்துநாயகனா
சீனைப்பார்த்தாறகருணைசெயவாரோபைங்கிளியே. (௯)

எனறுவிடியுமிறைவானோவென்றென்று
நினறநிலையெலலாநிசழ்ந்ததாயநீபைங்கிளியே. (௧௦)

ஏநதமடலூடுமெழுதாவிறைவடிவைச்
சிந்தைமடலாவெழுதிசசோபபேனோபைங்கிளியே. (௧௧)

கண்ணுண்மணிபோலினபங்காட்டியெனைபபிரிநத
திணணியருமினனம்வநதுசோவாரோபைங்கிளியே. (௧௨)

ஏடார்மலாசூடேனெய்பெருமான்பொனனடியாம
வாடாமலர்முடிககுவாய்ககுமோபைங்கிளியே. (௧௩)

கலலேன்மலரோனசனிந்தவன்பேபூசையெனற
நலலோாபொல்லாவெனையுநாடுவாரோபைங்கிளியே (௧௪)

கண்டதனைக்கண்டுகலக்கந்தவிரெனவே
விண்டபெருமானையுநான்மேவுவனோபைங்கிளியே. (௧௫)

காணாதகாட்சிகருத்துவந்துகாணாமல்
வீணாள்கழிததுமெலிவேனோபைங்கிளியே (௧௬)

காந்தமிரும்பைக்கவர்ந்திழுததாலென்னவருள
வேந்தனெனையிழுத்துமேவுவனோபைங்கிளியே, (௧௭)

காதலால்வாடினதுங்கண்டனையேயெமமிறைவர்
போதரவாயின்பம்புசிப்பேனோபைங்கிளியே. (௧௮)

கிட்டிககொண்டன்பருண்மைடசேளாப்பலவடிகொள்
பட்டிக்குமின்பமுண்டோசொல்லாய்நீபைங்கிளியே. (௧௯)

கிட்டோய்நெஞ்சிற்கிளர்வார்தழுவவென்று
னெட்டோராவரவாநேசமென்னோபைங்கிளியே. (௨௦)

கூறுங்குணமுமில்லாக்கொள்கையினாரென்கவலை
யாறும்படிக்குமணைவாரோபைங்கிளியே. (உக)

சின்னஞ்சிறியேன்றன்சிந்தைகவர்ந்தாரிறைவர்
தன்னந்தனியேதவிப்பேனோபைங்கிளியே. (உஉ)

சிந்தைமருளைத்தெளிவித்தென்னையாள
வந்தகுருநாதனருள்வாய்க்குமோபைங்கிளியே. (உ௩)

சொல்லிறந்துநின்றசுகரூபப்பெம்மானை
யல்லும்பகலுமணைவேனோபைங்கிளியே. (உச)

தற்போதத்தாலேதலைகீழதாகவைய
னற்போதவின்பவரசாட்செலுமோபைங்கிளியே. (உரு)

தன்னையறியுந்தருணந்தனிற்றலைவ
ரென்னையணையாதவண்ணமெங்கொளித்தார்பைங்கிளியே. (உசு)

தாங்கரியமையலெல்லாந்தந்தென்னைவிட்டின்னருளாம
பாங்கிசைச்சோர்ந்தாரிறைக்குப்பண்போசொல்பைங்கிளியே. (உஎ)

தாவியதோமர்க்கடமாந்தன்மைவிட்டேயண்ணலிட்ட
தோவியம்போனிறகினென்னையுள்குவரோபைங்கிளியே (உஅ)

தீராக்கருவழக்கைத்தீரவிட்டெங்கென்னையினிப்
டாரோருந்தாண்டானைப்பற்றுவனோபைங்கிளியே. (உகூ)

தூங்கிவிழித்தென்னபலன்றூங்காமற்றூங்கிநிற்கும்
பாங்குகண்டாலன்றோபலன்காண்பேன்பைங்கிளியே. (௩0)

தொல்லைகவலைதொலைத்துத்தொலையாத
வெல்லையிலாவின்பமயமெய்துவனோபைங்கிளியே. (௩க)

நன்னெஞ்சத்தன்பரெல்லாநாதனைச்சேர்ந்தின்பணைந்தார்
வன்னெஞ்சத்தாலேநான்வாழ்விழந்தேன்பைங்கிளியே. (௩உ)

நானேகருதினவரநாடார்சும்மாவிருந்தாற்
றானேயணைவரவர்தன்மையென்னோபைங்கிளியே. (௩௩)

நீர்க்குமிழிபோன்றவுடனிற்கையிலேசாசுவதஞ்
சேர்க்கவறியாமற்றிகைப்பேனோபைங்கிளியே. (௩ச)

நெஞ்சகத்தில்வாழ்வார்நினைக்கின்வேறென்றணையார்
வஞ்சகத்தாரல்லரவர்மார்க்கமென்னோபைங்கிளியே. (௩ரு)

பன்முத்திரைச்சமயம்பாழ்படக்கல்லாலடிவாழ்
சின்முத்திரையரசைச்சேர்வேனோபைங்கிளியே. (௩சு)

பச்சைகண்டநாட்டிற்பறக்குமுனைப்போற்பறந்தே
னிச்சையெல்லாமண்ணற்கியம்பிவாபைங்கிளியே. (௩௭)

பாசபந்தஞ்செய்ததுன்பம்பாராமலெம்மிறைவ
ராசைதந்ததுன்பமதற்காற்றேனே பைங்கிளியே. (௩௮)

பாராசையற்றிறையைப்பற்றறநான்பற்றிநின்ற
பூராயமெல்லாம்புகன்றுவாபைங்கிளியே. (௩௯)

பேதைப்பருவத்தேபின்றொடர்ந்தென்பக்குவமுஞ்
சோதித்தவண்ணல்வந்துதோய்வாரோபைங்கிளியே. (௪0)

பைம்பயிரைநாடுமின்போற்பார்பூத்தபைங்கொடிசோ
செம்பயிரைநாடித்திகைத்தேனே பைங்கிளியே. (௪௧)

பொய்க்கூடுகொண்டுழலும்புவனேனெம்மிறைவா
மெய்க்கூடுசென்றுவிளம்பிவாபைங்கிளியே. (௪௨)

பொய்ப்பணிவேண்டேனைப்பொருட்படுத்தியண்ணலென்பானா
மெய்ப்பணியுந்தந்தொருகாலமேவுவனோபைங்கிளியே. (௪௩)

மண்ணுறங்கும்விண்ணுறங்குமற்றுள்ளவெலாமுறங்குங்
கண்ணுறங்கேனெம்மிறைவர்காதலாற்பைங்கிளியே. (௪௪)

மட்டுப்படாதமயக்கமெல்லாந்தீரவென்னை
வெட்டவெளிவீட்டிலண்ணன்மேவுவனோபைங்கிளியே. (௪௫)

பாலவர்த்தென்னைவளர்த்திறைவாபன்னெறியாம
பாலைவனத்தில்விட்டபாவமென்னோபைங்கிளியே. (௪௬)

மெய்யினோயமாற்றவுழ்தமெத்தவுண்டெம்மண்ணறாத
மையனோபதிராகமருந்துமுண்டோபைங்கிளியே. (௪௭)

மேவுபஞ்சவண்ணமுற்றாய்வீணசிறையாலல்லலுற்றாய்
பாவிபஞ்சவண்ணம்பகர்ந்துவாபைங்கிளியே. (௪௮)

வாய்திறவாவண்ணமெனைவைத்தாண்டார்க்கென்றுயரை
நீதிறவாச்சொல்லினிசமாங்காண்பைங்கிளியே. (௪௯)

வாட்டப்படாதமவுனவிணபங்கையாலே
காட்டிக்கொடுத்தானைக்காண்பேனோபைங்கிளியே. (௫0)

வாராவரவாகவந்தருளுமோனருக்கென்
பேராசையெல்லாம்போய்ப்பேசிவாபைங்கிளியே. (௫௧)

விண்ணவர்தம்பாலமுதம்வேப்பங்காயாகவென்பாற்
பண்ணியதெம்மண்ணன்மயல்பார்த்தாயோபைங்கிளியே. (௫௨)

விண்ணுள்வெளியடங்கிவேறற்றதென்னவருட்
கண்ணுளடங்கிடவுங்காண்பேனோபைங்கிளியே. (௫௩)

விண்ணோர்நிலவுதவழ்மேடையிலெல்லாருமுற
மண்ணானவீட்டிலென்னைவைத்ததென்னோபைங்கிளியே. (௫௪)

உள்ளத்தினுள்ளேயொளித்திருந்தென்கள்ளமெல்லாம்
வள்ளலறிந்தாலெனக்குவாயுமுண்டோபைங்கிளியே. (௫௫)

ஆகத்தைநீக்குமுன்னேயாவித்துணைவரைநான
ருகத்தின்வண்ணந்தழுவுவனோபைங்கிளியே. (௫௬)

தானேசுபாவந்தலைப்படநின்றான்ஞான
வானானவரும்வருவாரோபைங்கிளியே. (௫௭)

கள்ளத்தலைவரவாகைகாட்டிப்பேசாம
லுள்ளத்திலவந்தவுபாயமென்னோபைங்கிளியே. (௫௮)

எந்நாட்கண்ணி.

தெய்வ வணக்கம்.

நீர்பூத்தவேணிநிலவெறிப்பமன்றாடுங்
கார்பூத்தகண்டனையான்காணுநாளெந்நாளோ. (௧)

பொன்னுருமன்றணைமணிப்பூவைவிழிவண்டுசுற்று
மென்னாமுதினலமிச்சிப்பதெந்நாளோ. (௨)

நீக்கிமலக்கட்டறுத்துநேரேவெளியிலெம்மைத்
தூக்கிவைக்குந்தாளைத்தொழுதிடுநாளெந்நாளோ. (௩)

திருமுகங்காட்டாமலென்றுங்கர்ப்பூரம்வீசுந்
திருமுகமேநோக்கித்திருக்கறுப்பதெந்நாளோ (௪)

வெஞ்சேலெனும்விழியார்வேட்கைநஞ்சுக்கஞ்சினரை
யஞ்சேலெனுங்கைக்கபயமென்பதெந்நாளோ. (௫)

ஆறுசமயத்துமதுவதுவாய்நின்றிலங்கும்
வீறுபரையிருந்தாண்மேவுநாளெந்நாளோ. (௬)

பச்சைநிறமாய்ச்சிவந்தபாகங்கலந்துலகை
யிச்சையுடனீன்றாளையாங்காண்பதெந்நாளோ. (௭)

ஆதியந்தங்காட்டாதகண்டிதமாய்நின்றுணர்த்தும்
போதவடிவானடியைப்போற்றுநாளெந்நாளோ. (௮)

கங்கைநிலவுசடைக்காட்டானைத்தந்தையெனும்
புங்கவெண்கோட்டானைப்பதம்புந்திவைப்பதெந்நாளோ. (கூ)

அஞ்சுமுகங்காட்டாமலாறுமுகங்காட்டவந்த
செஞ்சரணச்சேவடியைச்சிந்தைவைப்பதெந்நாளோ. (க0)

தந்தையிருதாளணித்துத்தம்பிரான்றுளசேர்ந்த
வெந்தையிருதாளிணைக்கேயின்புறுவதெந்நாளோ. (கக)

குருமரபின்வணக்கம்.

தூயகரமலரார்சொல்லாமற்சொன்னவுண்மை
ஐயனைக்கல்லாலரசையாமணைவதெந்நாளோ (க)

சிந்தையினுக்கெட்டாதசிற்சுகத்தைக்காட்டவல்ல
நந்தியடிக்கீழ்க்குடியாய்நாமணைவதெந்நாளோ. (உ)

எந்தைசனற்குமாரனுதியெமையாட்கொள்வான
வந்ததவத்தினரைவாழ்த்துநாளெந்நாளோ. (ங)

பொய்கண்டாரகாணுப்புனிதமெனுமத்துவித
மெய்கண்டநாதனருண்மேவுநாளெந்நாளோ. (ச)

பாதிவிருத்தத்தாலிப்பாரிவிருத்தமாகவுண்மை
சாதித்தார்பொன்னடியைத்தான்பணிவதெந்நாளோ. (ரு)

சிற்றம்பலமன்னுஞ்சின்மயராந்தில்லைநகாக்
கொற்றங்குடிமுதலைக்கூறுநாளெந்நாளோ (சு)

குறைவிலருண்ஞானமுதல்கொற்றங்குடியடிக
ணறைமலர்த்தாட்கன்புபெற்றுநாமிருப்பதெந்நாளோ. (எ)

நாளவங்கள்போகாமனன்னெறியைக்காட்டியெமை
யாளவந்தகோலங்கட்கன்புவைப்பதெந்நாளோ. (அ)

என்னறிவையுள்ளடக்கியெனைப்போலவருமவுனி
தன்னறிவுக்குள்ளேநானசாருநாளெந்நாளோ. (கூ)

ஆறொணாறைநாடினதற்காறுமுண்டாமென்றெமக்குக்
கூறுமவுனியருள்கூடுநாளெந்நாளோ. (க0)

நில்லாமனின்றருளைநேரேபாரென்றவொரு
சொல்லானமவுனியருட்டோற்றுநாளெந்நாளோ. (கக)

வைதிகமாஞ்சைவமவுனிமவுனத்தளித்த
மெய்திகழ்ந்தென்னல்லல்விடியுநாளெந்நாளோ. (கஉ)

வாக்குமனமற்றமவுனிமவுனத்தருளே
தாக்கவுமென்னல்லலெல்லாந்தட்டழிவதெந்நாளோ. (கங)

அடியார்வணக்கம்.

வெம்பந்தந்தீர்த்துலகாள்வேந்தன்றிருஞான
சம்பந்தனையருளாற்சாருநாளெந்நாளோ. (௧)

ஏரின்சிவபோகமிங்கிவற்கேயென்னவுழ
வாரங்கொள்செங்கையர்தாளாரம்வைப்பதெந்நாளோ. (௨)

பித்தரிறையென்றறிந்துபேதைபாற்றூதனுப்பு
வித்ததமிழ்ச்சமர்த்தர்மெய்ப்புகழ்வதெந்நாளோ (௩)

போதவூர்நாடறியப்புத்தர்தமைவாதில்வென்ற
வாதவூரையனன்பைவாஞ்சிப்பதெந்நாளோ. (௪)

ஓட்டெடுப்பதன்றியுலகைத்துறந்தசெல்வப
பட்டினத்தார்பத்ரகிரிபண்புணர்வதெந்நாளோ (௫)

கண்டதுபொய்யென்றகண்டாகாரசிவமெய்யெனவே
விண்டசிவவாக்கியர்தாண்மேவுநாளெந்நாளோ. (௬)

சக்கரவர்த்தித்தவராசயோகியெனு
மிக்கதிருமூலனருண்மேவுநாளெந்நாளோ (௭)

கந்தரனுபூதிபெற்றுக்கந்தரனுபூதிசொன்ன
வெந்தையருணடியிருக்குநாளெந்நாளோ. (௮)

எண்ணரியசித்தரிமையோர்முதலான
பண்ணவர்கள்பத்தரருள்பாலிப்பதெந்நாளோ (௯)

யாக்கையைப்பழித்தல்.

சுக்கிலமுநீருஞ்சொரிமலமுநாறுமுடற
புக்குழலுமவாஞ்சையினிப்போதுமெனபதெந்நாளோ. (௧)

நீர்க்குமிழிபூணமைத்துநின்றுநில்லாமெய்ய
பார்க்குமிடத்திதன்மேற்பற்றறுவதெந்நாளோ. (௨)

காக்கைநரிசெந்நாய்கழுகொருநாள்கூடியுண்டு
தேக்குவிருந்தாமுடலைச்சீயெனபதெந்நாளோ. (௩)

செங்கிருமியாதிசெனித்தசென்மபூமியினை
யிங்கெனுடலென்னுமிழுக்கொழிவதெந்நாளோ. (௪)

தத்துவர்தொண்ணூற்றறுவர்தாமாய்வாழ்நாட்டைப்
பித்தனெனுமபிதற்றொழிவதெந்நாளோ. (௫)

ஊனென்றிரதனுணர்த்துமதைவிட்டறிவே
னென்றபாவிதலைநாணுநாளெந்நாளோ. (௬)

வேலையிலாவேதன்விதித்தவிந்த்ரசாலவுடன்
மாலைவியாபாரமயக்கொழிவதெந்நாளோ. (௭)

ஆர்ந்துவினைக்கினரோசிகமாமிவ்வுடலில
வாழ்ந்துபெறும்பேற்றைமதிக்குநாளெந்நாளோ. (௮)

மும்மலச்சேராணமுழுக்குடம்பாகமெனு
மிம்மலசாயத்துளிகழ்ச்சிவைப்பதெந்நாளோ. (௯)

நாற்றமிக்ககாட்டுநவவாயில்பெற்றபசுரு
சோற்றுத்தருத்திசுமைபெயல்பதெந்நாளோ. (௧0)

உருவிருப்பவுள்ளோதானூறுமலக்கேணி
யருவருப்புவாழ்க்கையைக்கண்டஞ்சுநாளெந்நாளோ. (௧௧)

மாதரைப்பழித்தல.

மெய்வீசுநாற்றமெல்லாமிக்கமஞ்சளானமறைத்துப
பொய்வீசும்வாயார்புலையொழிவதெந்நாளோ (௧)

திண்ணியநெஞ்சைப்பறவைசிக்கக்குழற்காட்டமற
கண்ணிவைப்போமாயங்கடக்குநாளெந்நாளோ. (௨)

கண்டுமொழிபேசிமனங்கண்டுகொண்டுகைவிலையாக
கொண்டுவிடுமானாபொய்க்கூத்தொழிவதெந்நாளோ (௩)

காமனைவாவென்றிருண்டகணவலையைவீசுமின்னார்
நாமமறந்தருளைநண்ணுநாளெந்நாளோ (௪)

கண்களில்வெண்பூளைகரப்பக்கருமையிட்ட
பெண்கண்மயற்பயிப்பிழைக்குநாளெந்நாளோ (௫)

வீங்கித்தளர்ந்துவிழுமுலையார்மேல்வீழ்ந்து
தூங்குமதன்சோம்பைத்துடைக்குநாளெந்நாளோ. (௬)

கச்சிருக்குங்கொங்கைசருமமிருக்குமின்மாற்றம
வைச்சிருக்குமாதர்மயக்கொழிவதெந்நாளோ. (௭)

பச்சென்றகொங்கைப்பசப்பியர்பாழானமய
னச்சென்றறிந்தருளைநண்ணுநாளெந்நாளோ. (௮)

உந்திச்சுழியாலுளத்தைச்சுழித்தகனை
தந்தித்தனத்தார்தமைமறப்பதெந்நாளோ. (௯)

தீட்டுவைத்தசேலைப்பூங்கொய்சகத்திற்சிந்தையெல்லாங்
கட்டிவைக்குமாயமின்னார்கட்டழிவதெந்நாளோ. (௧0)

ஆழாழியென்னவளவுபடாவஞ்சநெஞ்சப்
பாழானமாதர்மயற்பற்றொழிவதெந்நாளோ. (௧௧)

தூயபனித்திங்கள்சுடுவதெனப்பிரிந்தேற்ற
மாயமடவார்மயக்கொழிவதெந்நாளோ. (கஉ)

ஏழைக்குறும்புசெயுமேந்திழையார்மோகமெனும்
பாழைக்கடந்துபயிராவதெந்நாளோ. (கங)

விண்டுமொழிகுளறிவேட்கைமதுமொண்டெருண்
டொண்டியார்கள்கட்கடையிற்சுற்றுழல்வதெந்நாளோ. (கச)

மெய்யிற்சிவப்பிறக்கமேவுமின்பம்போனமாதர்
பொய்யிலின்பினென்றுபொருந்தாநாளெந்நாளோ. (கரு)

தத்துவமுறைமை.

ஐம்பூதத்தாலேயலக்கழிந்ததோஷமற
வெம்பூதநாதனருளெய்துநாளெந்நாளோ. (க)

சத்தமுதலாம்புலனிற்சஞ்சரித்தகள்வரெனும்
பித்தாயந்தீர்ந்துபிழைக்குநாளெந்நாளோ (உ)

நாளும்பொறிவழியைநாடாதவண்ணமெமை
யாளும்பொறியாலருள்வருவதெந்நாளோ. (ங)

வாக்காதியானகன்மமாயைதம்பாலவினைகாலம்
போக்காமலுண்மைபொருந்துநாளெந்நாளோ. (ச)

மனமானவானரக்கைமாலையாகாம
லெனையாளடிகளடியெய்துநாளெந்நாளோ. (ரு)

வேட்டைப்புலப்புலையாமேவாதவண்ணமனக்
காட்டைத்திருத்திக்கரைகாண்பதெந்நாளோ (சு)

உந்துபிறப்பிறப்பையறவிடாதேதையருள்
வந்துபிறக்கமனமிறப்பதெந்நாளோ. (எ)

புத்தியெனுந்துட்டப்பொறியரவின்வாய்த்தேரை
யொத்துவிடாதேதையருளோங்குநாளெந்நாளோ. (அ)

ஆங்காரமென்னுமதயானைவாயிற்கரும்பா
போகாமலெந்தையருளெய்துநாளெந்நாளோ. (கூ)

சித்தமெனும்பௌவத்திரைக்கடலில்வாழ்துரும்பாய்
நித்தமலையாதருளினிற்குநாளெந்நாளோ. (க0)

வித்தியாதத்துவங்களேழுமவெருண்டோடச்
சுத்தபரபோகத்தைத்துய்க்குநாளெந்நாளோ. (கக)

சுத்தவித்தையேமுதலாத்தோன்றுமோரைந்துவகைத்
தத்துவத்தைநீக்கியருள்சாருநாளெந்நாளோ. (கஉ)

பொல்லாதகாமப்புலைத்தொழிலிலென்னறிவு
செல்லாமனன்னெறியிறசேருநாளெந்நாளோ. (கங)

அடிகளடிக்கீழ்க்குடியாயாம்வாழாவண்ணவ
குடிகெடுக்குமபாழ்மடிமைக்கூறொழிவதெந்நாளோ. (கச)

ஆனபுறக்கருவியாறுபததுமற்றுளவும்
போனவழியுஙகூடப்புனமுளைபபதெந்நாளோ. (கரு)

அந்தகனுக்கெங்குமிருளானவாறுவறிவில
வாதவிருளவேலைவடியுநாளெந்நாளோ. (கசு)

புன்மலத்தைசசோ்நதுமலபோதமபொருந்துதலபோய்
நின்மலத்தைச்சேர்ந்துமலநீஙகுநாளெந்நாளோ. (கஎ)

கண்டுகண்டுந்தேறுககலக்கமெலலாந்தீர்வணணம்
பண்டைவினைவேரைபபறிககுநாளெநநாளோ (கஅ)

பைங்கூழ்வினைதான்படுசாவியாகவெமக்
கெஙகோன்கிரணவெயிலெய்துநாளெந்நாளோ. (கசு)

குறிததவிதமாதியாற்கூடும்வினையெல்லாம்
வறததவிததாமவண்ணமருளவநதிடுநாளெநநாளோ. (உ0)

சஞ்சிதமேயாதிசரககானமுச்சேரும்
வெந்தபொரியாகவருணமேவுநாளெந்நாளோ. (உக)

தேகமுதலுன்காததிரண்டொன்றாய்நின்றிலகு
மோகமிகுமாயைமுடியுநாளெந்நாளோ. (உஉ)

சத்தமுதலாத்தழைததிங்கெமக்குணர்ததுஞ்
சுததமாமாயைதொடககறவதெந்நாளோ (உங)

எம்மைவினையையிறையையெம்பாற்காட்டாத
வெமைதிரோதையகலுநாளெந்நாளோ. (உச)

நித்திரையாய்வந்துவினைவழிகக்குங்கேவலமாஞ்
சத்துருவைவெல்லுஞ்சமாததறிவதெந்நாளோ. (உரு)

சன்னபின்னலானசகலமெனுங்குப்பையிடை
முன்னவன்ஞானக்கனலைமூட்டுநாளெநநாளோ. (உசு)

மாயாவிகாரமலமொழிசுத்தாவததை
தோயாவருளைததொடருநாளெந்நாளோ. (உஎ)

தன்னுண்மை.

உடம்பறியுமென்னுமந்தவூழலெல்லாந்தீரத
திடம்பெறவேயெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ. (க)

செம்மையறிவாலறிந்துதேகாதிக்குள்ளிசைந்த
வெம்மைப்புலப்படவேயாமறிவதெந்நாளோ. (௨)

தத்துவமாம்பாழ்த்தசடவுருவைத்தான்சுமந்த
சித்துருவாமெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ. (௩)

பஞ்சப்பொறியையுயிரென்னுமந்தப்பஞ்சமறச்
செஞ்சவேயெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ. (௪)

அந்தக்கரணமுயிராமென்றவந்தரங்க
சிந்தைக்கணத்திலெம்மைத்தேர்ந்தறிவதெந்நாளோ. (௫)

மூக்குணத்தைச்சீவனெனனுமூடத்தைவிட்டருளா
லக்கணமேயெம்மையறிந்துகொள்வதெந்நாளோ. (௬)

காலையுயிரென்னுங்கலாதிகள்சொற்கேளாமற்
சீலமுடனெம்மைத்தெளிந்துகொள்வதெந்நாளோ. (௭)

வானகெடுத்துத்தேடுமதிகேடாபோலவெமை
நான்கெடுத்துத்தேடாமனைசறிவதெந்நாளோ. (௮)

அருளியல்பு.

ஞானந்தருநாடிநமக்குவேண்டாமென்
றூனந்தநாட்டிலவுதரிப்பதெந்நாளோ. (௧)

பொய்க்காட்சியானபுவனத்தைவிட்டருளா
மெய்க்காட்சியாமபுவனமேவுநாளெந்நாளோ (௨)

ஆதியந்தங்காட்டாமலம்பரம்போலேநிறைந்த
நீதியருட்கடலைச்சேருநாளெந்நாளோ. (௩)

எட்டுத்திசைக்கீழ்மேலெங்குநெருங்கிவரும்
வெட்டவெளிவிண்ணூற்றினமெய்தோய்வதெந்நாளோ. (௪)

ஞாதானமென்றுசுருதியெல்லாமோலமிடு
மீதானமானவெற்பைமேவுநாளெந்நாளோ. (௫)

வெந்துவெடிக்கின்றசிந்தைவெப்பகலத்தண்ணருளாய்
வந்துபொழிகின்றமழைகாண்பதெந்நாளோ. (௬)

சூரியர்கள்சந்திரர்கடோன்றாச்சொயஞ்சோதிப்
பூரணதேயத்திற்பொருந்துநாளெந்நாளோ. (௭)

நின்றமனவெப்பக்கலக்கமெலாந்தீரவருட்
டென்றல்வந்துவீசவெளிசேருநாளெந்நாளோ. (௮)

நீட்டுமன்செங்கோல்கடாவடிக்குங்கோலாக
வெட்டவெளிப்பொருளைமேவுநாளெந்நாளோ (௯)

சாலக்கபாடத்தடை தீரவெம்பெருமா
ஞாலக்கமணடபத்துளோடுநாளெந்நாளோ. (க0)

விணணவன்றுளென்னும்விரிகிலாமண்டபத்திற்
றண்ணீரருநதிதளர்வொழிவதெநநாளோ. (கக)

வெய்யபுலிபார்ததுவிழிததிருந்தவலலறத
துய்யவருளிற்றுயிலுநாளெநநாளோ. (கஉ)

வெய்யபிறவிவெயில்வெப்பமெலாவிட்டகல
வையனடிநீழலணையுநாளெநநாளோ. (கங)

வாதைப்பிறவிவனகடலைநீநதவையன
பாதப்புணையிணையைப்பற்றுநாளெநநாளோ. (கச)

ஈனமில்லாமெய்ப்பொருளையிமையிலேகாணவெளி
ஞானமெனுமஞ்சனததைநானபெறுவதெநநாளோ. (கரு)

எல்லாமிறந்தவிடததெநதைநிறைவாம்வடிவைப
புல்லாமற்புல்லிப்புணருநாளெநநாளோ. (கசு)

ஈடத்துளுயிர்போலெமகருத்தானுயிராய்ஞான
நடத்துமுறைகணடுபணிநாமவிடுவதெநநாளோ (கஎ)

ஏககனுமாந்துன்பவிருட்கடலைவிட்டருளா
மிககரையேறிவெளிப்படுவதெநநாளோ. (கஅ)

பொருளியலபு.

கைவிளக்கின்பின்னேபோய்க்காணபாரபோன்மெய்ஞ்ஞான
மெய்விளககின்பினனேபோயமெயகாணபதெந்நாளோ. (க)

கேடில்பசுபாசமெலலாங்கீழ்ப்படவுநதானேமே
லாடுஞ்சுகப்பொருளுககன்புறுவதெநநாளோ (உ)

ஆணவத்தைநீககியறிவுடையவகையாக
காணவததைககப்பாலைககாணுநாளெந்நாளோ. (ங)

நீககப்பிரியாவினைக்கமறக்ககூடாப்
போக்குவரவற்றபொருளணைவதெநநாளோ. (ச)

அண்டருக்குமெய்ப்பிலவைப்பாமாரமுதையெனனகததிற்
கண்டுகொண்டுநின்றுகளிக்குநாளெநநாளோ. (ரு)

காட்டுந்திருவருளேகண்ணாகக்கண்டுபர
வீட்டின்பமெய்ப்பொருளைமேவுநாளெநநாளோ. (சு)

நானெனதன்மைநழுவியேயெவ்வுயிர்க்குங
தானாவுண்மைமதனைச்சாருநாளெநநாளோ. (எ)

சிந்தைமறந்துதிருவருளாய்நிற்பவர்பால்
வந்தபொருளெம்மையுந்தான்வாழ்விப்பதெந்நாளோ. (௮)

எள்ளுக்குளெண்ணெய்போலெங்கும்வியாபகமா
யுள்ளவொன்றையுள்ளபடியோருநாளெந்நாளோ. (௯)

அருவுருவமெல்லாமகன்றதுவாயான
பொருளெமக்குவந்துபுலப்படுவதெந்நாளோ. (௧௦)

ஆரணமுங்காணவகண்டிதாகாரபரி
பூரணமவந்தெம்மைப்பொருந்துநாளெந்நாளோ. (௧௧)

சத்தொடுசித்தாகித்தயங்கியவானந்தபரி
சுத்தவகண்டசிவந்தோன்றுநாளெந்நாளோ. (௧௨)

எங்கெங்குமபார்த்தாலுமின்புருவாய்நீக்கமின்றித்
தங்குமதனைப்பொருளைச்சாருநாளெந்நாளோ (௧௩)

அடிமுடிகாட்டாதசுத்தவம்பரமாஞ்சோதிக
கடுவெளிவந்தென்னைக்கலக்குநாளெந்நாளோ. (௧௪)

ஒன்றனையுங்காட்டாவுளத்திருளைக்கூறையிட்டு
நின்றபரஞ்சோதியுடனிற்குநாளெந்நாளோ. (௧௫)

எந்தச்சமயமிசைந்துமறிவூடறிவாய்
வந்தபொருளேபொருளாவாஞ்சிப்பதெந்நாளோ. (௧௬)

எவ்வாறிங்குற்றுணர்ந்தாராயாவரவாதமக்கே
யவ்வாறாய்நின்றபொருட்கன்புவைப்பதெந்நாளோ (௧௭)

பெண்ணாணலியெனவும்பேசாமலென்னறிவின
கண்ணூடேநின்றவொன்றைக்காணுநாளெந்நாளோ. (௧௮)

நினைப்புமறப்புமறநின்றபரஞ்சோதி
தனைப்புலமாவென்னறிவிற்சந்திப்பதெந்நாளோ (௧௯)

ஆனந்தவியல்பு.

பேச்சுமூச்சில்லாதபேரின்பவெள்ளமுற்று
நீச்சுநிலைகாணுமனிற்குநாளெந்நாளோ. (௧)

சித்தந்தெளிந்தோர்தெளிவிற்றெளிவான
சுத்தசுகக்கடலுட்டோயுநாளெந்நாளோ. (௨)

சிற்றின்பமுண்டுழசிந்தையனந்தங்கடல்போன
முற்றின்பவெள்ளமெமைமூடுநாளெந்நாளோ. (௩)

எல்லையில்பேரின்பமயமெப்படியென்றோதமக்குச்
சொல்லறியாமூமர்கள்போற்சொல்லுநாளெந்நாளோ. (௪)

அண்டரண்டகோடியனைத்துமுகாந்தவெள்ளங்
கொண்டதெனப்பேரின்பங்கூடுநாளெந்நாளோ. (௫)

ஆதிபாந்தமில்லாதவாதியநாதியெனுஞ்
சோதியினைப்பதறாதேதுணையுநாளெந்நாளோ. (௬)

சாலோகமாதிசவுக்கியமும்விட்டநம்பான
மேலானஞானவின்பமேவுநாளெந்நாளோ. (௭)

தற்பரத்தினுள்ளேயுஞ்சாலோகமாதியெனும
பொற்பறிந்தானந்தம்பொருந்துநாளெந்நாளோ. (௮)

உள்ளத்தினுள்ளேதானூறுஞ்சிவானந்த
வெள்ளத்தினைந்துவிடாயதீரவெந்நாளோ (௯)

கன்னலுடன்முக்கனியுங்கற்கண்டுஞ்சீனியுமாய்
மன்னுமின்பவாரமுதைவாயமடுப்பதெந்நாளோ. (௧௦)

மண்ணாதியென்றமாயக்கமெல்லாநீங்கிடவும
விண்ணாடெமுந்தசுகமேவுநாளெந்நாளோ. (௧௧)

கானற்சலம்போன்றகட்டுலகப்பொய்த்திர
வானமுதமாவிமருவுநாளெந்நாளோ. (௧௨)

தீங்கரும்பென்றாலினியதிலன்றாலினிப்பன்போற
பாங்குற்றபேரின்பப்படைச்சுகநாளெந்நாளோ (௧௩)

புண்ணியபாவங்களொருந்தொப்பயடெல்லா
நண்ணியபேரின்பசுகநாமுண்ணவெந்நாளோ. (௧௪)

அன்புநிலைமை.

திங்கரவிகண்டசரோருகம்போலென்னிதய
மிங்கவருள்கண்டுவிகசிப்பதெந்நாளோ. (௧)

வானமுகில்கண்டமயூரபக்ஷிபோலவையன
ஞானநடங்கண்டுநடிக்குநாளெந்நாளோ. (௨)

சந்திரனைநாடுஞ்சகோரபக்ஷிபோலறிவில
வந்தபரஞ்சோதியையாமவாருசிப்பதெந்நாளோ. (௩)

சூத்திரமெய்யப்புற்றகத்துக்குண்டலியாம்பொன்றுட்டிரு
சித்தனையென்கண்ணுறவெறிப்பதெந்நாளோ. (௪)

அந்தரத்தேநின்றுமோனந்தக்கூத்தனுந்தெங்கள்
சிந்தைதிறைகொடுத்துச்சேவிப்பதெந்நாளோ. (௫)

கள்ளனிவனென்றுமெள்ளக்கைவிடுஞ்சாரியமோ
வள்ளலேயென்றுவருந்துநாளெந்நாளோ (௬)

விண்ணூடர்காணுவிமலாபரஞ்சோதி
யண்ணாவாவென்றரற்றுநாளெந்நாளோ. (எ)

ஏதேதுசெய்தாலுமென்பணிபோய்நின்பணியா
மாதேவாவென்றுவருந்துநாளெந்நாளோ. (அ)

பண்டெங்காணேனுன்பழம்பொருளேயின்றுமுனைக்
கண்டெங்காணேனெனவுனைக்கைகுவிப்பதெந்நாளோ. (௯)

பொங்கேதமானபுழுக்கமெல்லாந்தீரவின்ப
மெங்கேயெங்கேயென்றிரங்குநாளெந்நாளோ. (௧௦)

கடலின்மடைகண்டதுபோற்கண்ணீராறாக
வுடல்வெதும்பிமூச்செறிந்துருகுநாளெந்நாளோ. (௧௧)

புலர்ந்தேன்முகஞ்சருகாய்ப்போனேனிற்காணே
னலந்தேனென்றேங்கியழுங்குநாளெந்நாளோ. (௧௨)

புண்ணீர்மையாளாபுலம்புமாபோற்புலம்பிக்
கண்ணீருங்கம்பலையுங்காட்டுநாளெந்நாளோ. (௧௩)

போற்றேனென்றாலுமென்னைப்புரத்திசையும்வேதனைக்கிங்
காற்றேனாற்றேனெனவரற்றுநாளெந்நாளோ. (௧௪)

பொய்ம்முடங்கும்பூமிசிலபோட்டலுறப்பூங்கமலன்
கைம்முடங்கநான்சனனங்கட்டறுவதெந்நாளோ. (௧௫)

கற்குணத்தைப்பின்றவஞ்சக்காரர்கள்கைகோவாம
னற்குணத்தாருடன்கைகோத்துநான்றிரிவதெந்நாளோ. (௧௬)

தொட்டனைமாமாயைச்சுழனீக்கியந்தரமே
விட்டனையோவென்றவியக்குநாளெந்நாளோ. (௧௭)

V.B.SUBRAHMANYASARMA TAMIL PANDIT

அன்பர்நெறி.

அத்துவாவெல்லாமடங்கச்சோதித்தபடி
சித்துருவாய்நின்றார்தெளிவறிவதெந்நாளோ. (௧)

எடுக்கச்சற்றச்சிந்தைமுயற்சியற்றுமூதறிவாய்ப்
பேச்சற்றோர்பெற்றவொன்றைப்பெற்றிடுநாளெந்நாளோ. (௨)

கோட்டாலையானகுணமிறந்தசிற்குணத்தோர்
தேட்டாலேதேடுபொருள்சேருநாளெந்நாளோ. (௩)

கொடுத்தேபசுத்துவத்தைக்கேடிலாவானந்த
மடுத்தோரடுத்தபொருட்கார்வம்வைப்பதெந்நாளோ. (௪)

கற்கண்டாலோவின்றகாக்கைபோற்பொய்மாயச்
சொற்கண்டாலோடென்பர்தோய்வறிவதெந்நாளோ. (௫)

மெய்த்தகுலங்கல்விபுனைவேடமெல்லாமோடவிட்ட
சித்தரொன்றுஞ்சேராச்செயலறிவதெந்நாளோ. (௬)

கூறறச்சமயக்குறும்படர்ந்துதற்போத
மற்றவர்கட்கற்றபொருட்கன்புவைப்பதெந்நாளோ. (எ)

தீர்க்கமிட்டுப்பாழாஞ்சமயக்குதர்க்கம்விட்டு
நிற்குமவர்கண்டவழிநேர்பெறுவதெந்நாளோ. (அ)

வீறியவேதாந்தமுதன்மிக்ககாலாந்தவரை
யாறுமுணர்ந்தோருணர்வுக்கன்புவைப்பதெந்நாளோ. (௯)

கண்டவிடமெல்லாங்கடவுண்மயமென்றறிந்து
கொண்டநெஞ்சர்நேயநெஞ்சிற்கொண்டிருப்பதெந்நாளோ. (க0)

பாக்கியங்களெல்லாம்பழுத்துமனம்பழுத்தோர்
நோக்குந்திருக்கூத்தைநோக்குநாளெந்நாளோ. (கக)

எவ்வுயிருந்தன்னுயிர்போலெண்ணுந்தபோதனர்கள்
செவ்வறிவைநாடிமிக்கச்சிந்தைவைப்பதெந்நாளோ. (கஉ)

அறிஞருரை.

இருநிலனாய்த்தீயாகியென்றதிருப்பாட்டின்
பெருநிலையைக்கண்டுணர்ந்துபேசச்சறுவதெந்நாளோ. (க)

அற்றவர்கட்கற்றசிவனென்றவத்துவித
முற்றமொழிகண்டருளின்மூழ்குநாளெந்நாளோ. (உ)

தானென்னைமுன்படைத்தானென்றதகவுரையை
நானென்னுமுண்மைபெற்றுநாமுணர்வதெந்நாளோ. (௩)

என்னுடையதோழனுமாமென்றதிருப்பாட்டி
னன்னெறியைக்கண்டுரிமைநாஞ்செய்வதெந்நாளோ. (௪)

ஆருடனேசேருமறிவென்றவவ்வுரையைத்
தேரும்படிக்கருடான்சேருநாளெந்நாளோ. (௫)

உன்னிலுன்னுமென்றவுறுமொழியாலென்னிதயந்
தன்னிலுன்னின்னெறியைச்சாருநாளெந்நாளோ. (௬)

நினைப்பறவேதானினைந்தேனென்றநிலைநாடி
யனைத்துமாயப்பொருளிலாழுநாளெந்நாளோ (எ)

சென்றுசென்றேயணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாகி
நின்றுவிடுமென்றநெறிநிற்குநாளெந்நாளோ. (அ)

ஆதியந்தமில்லாவரியபரஞ்சோதி
நீதிமொழிகண்டதுவாயிருக்குநாளெந்நாளோ. (௯)

பிறிதொன்றிலாசையின்றிப்பெற்றிருந்தேனென்ற
நெறியுடையான்சொல்வினிலைநிற்குநாளெந்நாளோ. (௧0)

திரையற்றநீர்போற்றெளியவெனதநேநாந்த
வுரைபற்றியுற்றங்கொடுக்குநாளெந்நாளோ. (௧௧)

அறியாவறிவிலவிழ்ந்தேனவென்ற
நெறியாமுறையுணர்ந்துநிற்குநாளெந்நாளோ (௧௨)

எனக்குநீயென்றுமியற்கையாய்ப்பின்னு
முனக்குநானென்றவுறுதிகொள்வதெந்நாளோ. (௧௩)

அறிவையறிவதுவேயாகுமெய்ப்பொருளென்
றுறுதிசொன்னவுண்மையினையோருநாளெந்நாளோ. (௧௪)

நிற்குநிலை.

பண்ணினிசைபோலப்பரமன்பானின்றதிற
னெண்ணியருளாகியிருக்குநாளெந்நாளோ, (௧)

அறிவோடறியாமையற்றறிவினூடே
குறியிலறிவுவந்துகூடுநாளெந்நாளோ. (௨)

சொல்லானமனத்தாற்றெருடராச்சப்பூரணத்தி
னில்லாநிலையாயநிலைநிற்பதெந்நாளோ (௩)

செங்கதிரின்முன்மதியந்தேசடங்கினிற்றிடல்போ
லங்கணனார்தாளிலடங்குநாளெந்நாளோ. (௪)

வானூட்டடங்குமவளிபோலவினைபுருவாங்
கோனூட்டடங்குங்குறிப்பறிவதெந்நாளோ. (௫)

செப்பரியதன்கருணைச்சிற்சுகமூ பூரணத்தி
லப்பினிடையுப்பாயணையுநாளெந்நாளோ (௬)

தூயவறிவானசுகச்சோதிதனைப்பார
றீயினிரும்பெனத்திகழுநாளெந்நாளோ. (௭)

தீதணையாகக்காப்பூரதீபமெனஞானக்கண்ட
சோதியுடனறிந்துதரிசறுவதெந்நாளோ. (௮)

ஆராருங்காணாதவற்புதனுறைபொற்படிக்கீழ்
நீரார்நிழல்போனிலாவுநாளெந்நாளோ. (௯)

எட்டத்தொலையாதவெந்தைபிரான்சந்நிதியிற்
பட்டப்பகல்விளக்காய்ப்பண்புறுவதெந்நாளோ. (௧0)

கருப்புவட்டைவாய்மடுத்துக்கண்டார்நாய்போல
விருப்புவட்டாவின்புருவைமேவுநாளெந்நாளோ. (௧௧)

துச்சப்புலனாற்சுழலாமற்றண்ணருளா
லுச்சிககதிரப்படிகமொவ்வுநாளெந்நாளோ. (கஉ)

இம்மாயிலத்திலிருக்கப்படியேயிருந்து
சும்மாவருளைத்தொடருநாளெந்நாளோ. (கங)

நானவனாந்தன்மையெய்திக்காண்டமெனவண்டமெங்கு
ஞானமதயானைநடத்துநாளெந்நாளோ (கச)

ஒன்றிரண்டுமில்லதுவாயொன்றிரண்டுமுள்ளதுவாய்
நின்றசமத்துநிலைநேர்பெறுவதெந்நாளோ. (கரு)

பாசமகலாமற்பசிபிறக்கலவாமன
மாசிலசமத்துமுத்திமாயக்குநாளெந்நாளோ. (கசு)

சிற்றறிவுமெள்ளச்சிதைந்தெம்மானபேரறிவை
யற்றறியாவண்ணமறிந்தோங்குநாளெந்நாளோ (கஎ)

தந்திரசதையந்திரதசைசசாரினவையாமறிவென
றெந்தையுணர்வெவழிவாவெய்துநாளெந்நாளோ. (கஅ)

போகருவறறவெளிபோனிறைந்தபோதநிலை
நீக்கமறக்கூடிநிலைபெறுவதெந்நாளோ (ககூ)

காண்பாருங்காட்டுவதுங்காட்சியுமாயநின்றவந்த
வீணபாவமபோயதுவாயமேவுநாளெந்நாளோ (உ0)

வாடாதேநானுவாயமாயாசேபங்கோனவ
நாடாதேநாடிநலம்பெறுவதெந்நாளோ. (உக)

ஆடலைபோகாட்டிபெமதாடலொழிசதாண்டானைபோற
றுடலைபேற்றுடித்தழைக்குநாளெந்நாளோ (உஉ)

மேடலொடுகீழிலலாதவிந்தத்தனாதமுடனே
பாலொடுநீர்போறகலந்துபணபுறுவதெந்நாளோ. (உங)

அறியாதறிந்தெமையாளண்ணலைநாமாக்க
குறியாதவண்ணங்குறிக்குநாளெந்நாளோ. (உச)

ஓராமனமந்திரமுமொன்றுமனம்பரனைப
பாராமறபார்த்துடழகுநாளெந்நாளோ. (உரு)

உளபற்றுமென்னுடையபற்றும்பூரணன்பால
வானபறறுங்கண்மோனமருவுநாளெந்நாளோ. (உசு)

ஆண்டான்மவுனியருளியதவறிவாலறிவைத
தூண்டாமற்றூண்டித்துலங்குநாளெந்நாளோ. (உஎ)

ஆணவத்தோடத்துவிதமானபடிமெய்ஞ்ஞானத்
தாணுவினோடத்துவிதஞ்சாருநாளெந்நாளோ. (௨௮)

நிலைபிரிந்தோர்கூடுதற்குபாயம்.

கனயநெறிகட்பிற்கடுநரகெனவெந்நாளு
நனைதருஞானநெறிநாமணைவதெந்நாளோ. (௧)

ஞானநெறிதானேநழுவிடினுமப்பதத்து
ளானமுத்திநல்குமெனவன்புறுவதெந்நாளோ. (௨)

பன்மார்க்கமானபலவடிபட்டேறுமொரு
சொன்மார்க்கங்கணைந்துலங்குநாளெந்நாளோ (௩)

அத்துவிதமென்றவநுபவசொற்கணிணைந்து
சுத்தசிவத்தைத்தொடருநாளெந்நாளோ (௪)

கேட்டனமுத்தனைக்காலசேடிலாநற்பதமும்
வாட்டமறவெமக்குவாய்க்குநாளெந்நாளோ. (௫)

என்னசிவனென்னபத்தறவெவ்விடமுமென்ஞான
சன்னிதிபாக்கண்டிடைசாதிப்பதெந்நாளோ (௬)

நாபிரமமென்றனநிலையொன்றுண்டாயா
றேபயிலெல்லாமொன்றாயத்திகழுநாளெந்நாளோ. (௭)

முச்சகமேயாதிமுழுதுமகண்டாகார
சச்சிதானந்தசிவந்தாமன்னபதெந்நாளோ (௮)

எவ்வடிவுப்பூரணமாமெந்தையுருவென்றிசைத்த
வவ்வடிவக்குள்ளேயடங்குநாளெந்நாளோ. (௯)

சத்திதத்தெல்லாஞ்சிவபூரணமாக
வத்தித்துவாழ்த்திவணங்குநாளெந்நாளோ. (௧௦)

தாங்கியபாரவிண்ணுந்திதானேநானுக்கினியா
யோங்குமியோகவுணர்வுற்றிடுநாளெந்நாளோ. (௧௧)

ஆசனமூர்த்தங்களறவகண்டாகாரசிவ
பூசைசெயவாசைபொருந்துநாளெந்நாளோ. (௧௨)

அஞ்செழுத்தினுண்மையதுவானவப்பொருளை
நெஞ்சழுத்தியொன்றுகிறகுநாளெந்நாளோ. (௧௩)

அவ்வுயிர்போலெவ்வுயிருமானபிரான்றன்னடிமை
யெவ்வுயிருமென்றுபணியாஞ்செயவதெந்நாளோ. (௧௪)

தேசிகர்கோனைத்திரன்மவுனிநர்தமக்கு
வாசிதொக்கமகிழுநாளெந்நாளோ. (௧௫)

குருலிங்கசங்கமமாகக்கொண்ட திருமேனி
யருண்மயமென்றன்புற்றருள்பெறுவதெந்நாளோ. (௧௮)

காண்பேனோவென்கண்ணி.

சிந்திக்குந்தோறுந்தெவிட்டாவமுதேயென
புந்திக்குநீதான்பொருந்திடவுங்காண்பேனோ. (௧)

கேவலத்தினூனகிடந்த கீழ்ப்பட்டாரின்பருட
காவலனைப்பாலொன்றிக்கலந்திடவுங்காண்பேனோ (௨)

ஆரியங்கடந்தவொன்றேதுவெளியாய்நின்ற
பெரியநிலையையானும்பெற்றிடவுங்காண்பேனோ. (௩)

மாசற்றவன்பானெஞ்சேமாறாதபெட்டசமாத
தேசற்றமாமணிநின்றேசினையுங்காண்பேனோ. (௪)

பாவிகாரமலமகலவெந்தைபிரா
னேயானுபூதிநிலைபெறவுங்காண்பேனோ. (௫)

பொய்யுலகும்பொய்ப்பற்றும்பொய்யுடலும்பொய்யெனவே
மெய்ப்பதியைமெய்யெனவேமெய்யுடனேகாண்பேனோ. (௬)

வாலற்றபட்டமெனமாயாமனப்பட்டலங்
காலற்றுவீழவுமுகக்கண்ணுற்றடையவுங்காண்பேனோ. (௭)

உள்ளும்புறம்புமொருபடித்தாயநின்றசுகங்
கொள்ளும்படிக்கிறைநீகூட்டிடவுங்காண்பேனோ. (௮)

காட்டுகின்றமுக்கட்கரும்பேகனியேயென
னாட்டமெல்லாந்தீரவுனதாடலையுங்காண்பேனோ. (௯)

ஆங்காரமற்றாங்கிச்சுகப்பெறுமானின்னிறைவி
னீங்காயநிற்குநிலைபெறவுங்காண்பேனோ (௧0)

வாதவூராளிதனைவான்கருணையால்விழுங்கும்
போதவூரேறேநின்பொன்னடியுங்காண்பேனோ. (௧௧)

சாட்டையிலாப்பம்பரம்போலாடுஞ்சால
நாட்டமறவெந்தைசுத்தஞானவெளிகாண்பேனோ (௧௨)

மன்றுநிம்வாழ்வேமரகதஞ்சோமாணிக்கக
குன்றேநின்றாட்கீழ்க்குடிபெறவுங்காண்பேனோ. (௧௩)

பொய்யயென்றறிந்துமெய்மைபோகவொட்டாதையவிந்த
வையங்கனமயக்கமாற்றிடவுங்காண்பேனோ. (௧௪)

தாயினுமா நல்லதயாளுவே நின்னையுன்னித்
தீயின்மெழுகொத்துருகுஞ் சிந்தைவரக்காண்பேனோ (கரு)

என்செயினுமைம்பொறியுமனமொருவாவேழைபணியா
நின்செயலென்றுணருணர்வுவரக்காண்பேனோ. (கசு)

மாளாத்தனையுமிரக்கமிலாக்கனபாவி
யுள்ளத்துமெந்தையுலாவிடவுங்காண்பேனோ (கஎ)

வஞ்சகஞ்சூதுகாலயமாமலவினையேனுமெய்யோ
னெஞ்சகத்திலையா நீநேர்பெறவுங்காண்பேனோ. (கஅ)

தொலையாப்பிறவித்துயர்கெடவுமெந்தைபிரான
மலவறக்கருணைமழைபெய்திடவுங்காண்பேனோ (ககூ)

வாளாருங்கண்ணார்மயற்கடலிலாழ்ந்தென்சிற
றூளாகவெந்தையருள்செய்யவுங்காண்பேனோ. (உ0)

பஞ்சாய்ப்பறக்குநெஞ்சப்பாவியைப்பேய்பிடியா
வஞ்சாதேயென்றினருள்செய்யவுங்காண்பேனோ. (உக)

ஆகெடுகாதிடலடந்தழுந்தமனப
வாடுமெனையைப்பார்க்காவென்னவுங்காண்பேனோ. (உஉ)

சிட்டாகவெளிபசிவனேயோடிவினைவேன
யட்டறவாசைமயக்கறவுங்காண்பேனோ. (உ௩)

உண்ணின்றுணர்த்துமூலப்பிலாவொளிக்கெறிநின்
றண்ணென்றசாந்தவருள்சார்ந்திடவுங்காண்பேனோ. (உச)

ஓங்கருசசொரூபகவொளருணாவுங்கோனறங்க
கூடுமடிக்கிறைஞ்சிக்கூடிடவுங்காண்பேனோ (உரு)

வாக்கானமனத்தானமதிப்பரியாப்பொன்னுருவோ
னேக்காயநோக்கிநிற்குநுண்ணுறவுங்காண்பேனோ. (உசு)

இவ்வுடப்பிற்குழனேபொறாயகோணின்னரு
ளவ்வுடம்புக்குளம்பாய்தரிக்கக்காண்பேனோ (உஎ)

நிக்கமாப்பொன்றுடன்றஞ்சமாய்நிற்குணமாரு
சுத்தவெளிநீவெளிப்பாய்த்தோன்றிடவுங்காண்பேனோ (உஅ)

கண்ணிறைந்தமோனக்கருத்தேயெனக்கனனேயென
னுண்ணிறைந்தமாயையொழிந்திடவுங்காண்பேனோ (உகூ)

அத்தாவிமலாவருளாளாவானந்த
சித்தாவெனக்குன்னருள்செய்திடவுங்காண்பேனோ. (௩0)

வீணேபிறந்திறந்துவேசறவேறுதையறக்
காணேனிறைநின்கருணைபெறக்காண்பேனோ. (௩க)

சட்டையொத்தவிவ்வுடலைத்தள்ளுமுன்னே ஞானசச்ச
நிட்டையைப்பெற்றையாநிருவிகற்பங்காண்பேனோ. (௬௨)
எல்லாந்தெரியுமிறைவாவென்னல்லலெல்லாஞ்
சொல்லாமுனீதானெருகுத்திரங்கக்காண்பேனோ. (௬௩)
அண்டபகிரண்டமனைத்துமொருபடித்தாகக்
கண்டவர்கள்கண்டதிருக்காட்சியையுங்காண்பேனோ. (௬௪)
உள்ளிருந்தகாயமுடனிருப்பவென்மைதனைப்பால
வாணிருந்தவென்னவுநானவந்திருக்கக்காண்பேனோ. (௬௫)
தினையத்தனையுந்தெளிவறியாப்பாவியே
னினைவிறபரமபொருளைநேரேபெறவுங்காண்பேனோ. (௬௬)
துன்பமெனுந்திட்டைதூர்த்துக்குறையிடையாவே
யின்பவெள்ளமவந்திடவெதிர்ப்படக்காண்பேனோ. (௬௭)

ஆகாதோவென்கண்ணி.

கல்லாதநெஞ்சகத்தைநெக்குருகவைத்தொழிற்கும
வல்லாயநின்னிடமவழங்கிஞலாகாதோ (௧)
என்னையறியவெனக்கறிவாயிருந்தவுன்
றன்னையறிந்தின்பநலஞ்சாரவைத்தாலாகாதோ (௨)
பொய்ம்மையமேபானபுரைநீரவெகதையின்ப
மெய்ம்மையவந்தென்னைவிழுங்கவைத்தாலாகாதோ. (௩)
மட்டில்லாச்சிற்சுகமாமவாழ்வேநின்னின்பமயரு
சிட்டார்போலயானருந்தித்தேக்கவைத்தாலாகாதோ. (௪)
அத்தாநின்பொற்றாளடிக்கேயனுதினமும
பித்தாக்கியின்பமபெருக்கவைத்தாலாகாதோ. (௫)
மெல்லியலார்மோகவிழற்கிறைப்பேனையாநின
னெல்லையிலானந்தநலமிசசித்தலாகாதோ. (௬)
சுட்டழகாயென்னுடனேசூறையிட்டானந்தமயக்
கட்டழகாநின்னைக்கலக்கவைத்தாலாகாதோ. (௭)
சோதியேகந்தாச்சுகவடிவேதூவெளியே
யாதியேநின்னையறியவைத்தாலாகாதோ. (௮)
நேசஞ்சிறிதுமிலேனின்மலனேநின்னடிக்கே
வாசஞ்செயவிரங்கிவாவென்றாலாகாதோ. (௯)

என்னறிவுக்குள்ளேயிருந்ததுபோலையாவே
நின்னறிவுநின்னுடனாயாநிற்கவைத்தாலாகாதோ. (க௦)

ஆதிப்பிரானேயென்னல்லலிருளகலச்
சோதிப்பிரகாசமயந்தோன்றுவித்தாலாகாதோ. (கக)

ஆசைச்சுழற்கடலிலாழாமலையாநின்
னேசப்புணைதந்தாணிறுத்தினாலாகாதோ. (கஉ)

பாசநிகளங்களெல்லாம்பஞ்சாகச்செஞ்செவே
யீசவெனைவாவென்றிரங்கினாலாகாதோ. (கங)

ஓயாவுள்ளன்பாயுருகிவாய்விட்டரற்றிச்
சேயாகியெந்தைநின்னைச்சேரவைத்தாலாகாதோ. (கச)

ஆதியாய்வாழ்வாயகண்டிதமாய்நின்றபரஞ்
சோதிநீயென்னைத்தொழும்பனென்றாலாகாதோ. (கரு)

விண்ணாரக்கண்டவிழிபோற்பரஞ்சோதி
கண்ணாநின்னிறைவைக்காணவைத்தாலாகாதோ. (கசு)

சேராமற்சேர்ந்துநின்றுசின்மயனேநின்மயத்தைப்
பாராமற்பாரெனநீபக்ஷம்வைத்தாலாகாதோ. (கஎ)

கண்ணாடிபோலவெல்லாங்காட்டுந்திருவருளை
யுண்ணாடியையாவுருகவைத்தாலாகாதோ. (கஅ)

மூலவிருள்சால்வாங்கமுந்தறிவுதோன்றவருட்
கோலம்வெளியாகவெந்தைகூடுவித்தாலாகாதோ. (க௯)

சாற்றரியவின்பவெள்ளந்தாக்குமதினீமூழ்கி
யாற்றமுறுமென்னவதிலுண்மைசொன்னாலாகாதோ. (உ௦)

நையுங்குழைந்திரண்டுகண்ணருவிபெய்யவரு
ளையநின்றருட்கீழேயடிமைநின்றாலாகாதோ. (உக)

இல்லையோவென்கண்ணி.

ஏதுந்தெரியாதெனைமறைத்தவல்லிருளைக்
காதநீக்கவொருஞானவிளக்கில்லையோ. (க)

பணியற்றுநின்றுபதைப்பறவென்கண்ணுண்
மணியொத்தசோதியின்பவாரியெனக்கில்லையோ. (உ)

ஏமமாலறியத்தறவெய்யபெருமான்யாதுமின்றிச்
சும்மாவிருக்கவொருசூத்திரந்தானில்லையோ. (ங)

நாப்பருங்கடையானேனுந்தாநின்னின்பமயம்
வாய்க்கும்படியினியோர்மந்திரந்தானில்லையோ. (௪)

ஊனாகிநிற்குமுணர்வைமறந்தையாநீ
தானாகநிற்கவொருதந்திரந்தானில்லையோ. (௫)

அல்லும்பகலுமகண்டவடிவேயுனைநான்
புல்லும்படியெனக்கோர்போதனைதானில்லையோ. (௬)

வேண்டாவோவென்கண்ணி.

கண்டவடிவெல்லாநின்காட்சியெனத்தேறக்குவித்துப்
பண்டுமின்றுநின்றவென்னைப்பார்த்திரங்கவேண்டாவோ. (௧)

வாதனையோடாடுமனப்பாம்புமாயவொரு
போதனைதந்தையாபுலப்படுத்தவேண்டாவோ. (௨)

தன்னையறியத்தனியறிவாய்நின்றருளு
நின்னையறிந்தென்னறிவைநீங்கிநிற்கவேண்டாவோ. (௩)

அள்ளக்குறையாவகண்டானந்தமெனும்
வெள்ளமெனக்கையாவெளிப்படுத்தவேண்டாவோ. (௪)

அண்டனேயண்டரமுதேயென்னாருயிரே
தொண்டனேற்கிளைப்பந்தொகுத்திரங்கவேண்டாவோ. (௫)

பாராதேநின்றபதையாதேசும்மாதான்
வாராயெனவும்வழிகாட்டவேண்டாவோ. (௬)

நல்லறிவேயென்கண்ணி.

எண்ணிறந்தமேன்மைபடைத்தெவ்வுயிர்க்குமவ்வுயிராய்க்
கண்ணிறைந்தசோதியைநான்காணவாநல்லறிவே. (௧)

சித்தானநாமென்சடத்தைநாமெனவேயென்றுஞ்
சத்தானவுண்மைதனைச்சாரவாநல்லறிவே. (௨)

அங்குமிங்குமெங்குநிறையற்புதனார்பொற்பறிந்து
பங்கயத்துள்வண்டாயப்பயன்பெறவாநல்லறிவே. (௩)

கான்றசோறென்னவிந்தக்காசினிவாழ்வத்தனையுந்
தோன்றவருள்வெளியிற்றோன்றவாநல்லறிவே. (௪)

பலவகைக்கண்ணி.

என்னரசேகேட்டிலையோவென்செயலோவேதுமிலை
தன்னரசுநாடாகித்தத்துவக்கூத்தாடியதே. (௧)

பணடொருகானின்பாறபழக்கமுணடோவெந்தைநினைக்
கணடொருகாறபோற்றககருததுஙகருதியதே. (உ)

கணடனவேகாணு மனறிககாணுவோகாணுவென
கொணடறிவேனெநதைநினைககூடுங்குறிப்பினையே. (ங)

கல்லாலடியிலவளாகற்பகமேயென்னளவோ
பொலலாவினைககுபபொருததநதானசொல்லாயே (ச)

தப்பிதமொன்றின்றியதுதானாகநிறகுமுண்மை
செபபியதுமலலாலெனசெனனிபறுதொட்டனையே. (ரு)

பாசானெஞ்சனிகலனவஞசனெனைரூவாயதிறநது
பேசாமவுனமபெருமானபடைததுவே (சா)

கறறதெலலாஙகறறேமுககணணுடையாய்நினபணியாய
நிறபதுகறறனரோநீருவிறபமாகததுவே. (எ)

முனனளவிலகனமருமயனாருளிவமெனனேரு
வெனனளவிலெநதாயிரஙகாதிருநததுவே. (அ)

நெஞசகமேகோகிசசசூடவெனறுமெனற
வஞசகனுககினபமெநதாயவாயககுமொயவாறே. (கூ)

பளளககடோறமபாரநதபுனலபோலுலகி
லுளளமடாரதாலுடையாயெனசெயவேனே, (க0)

முனனினைககபபினமறைகளுடைவிருளாகெடுவே
னெனனினைககவெனமறககவெநதைபெருமானே. (கக)

வல்லாளாயோகுநின்வாயசருணைபெனவிட்டதே
யிலலாதேபோனஞானவணணமுயவேனே (கஉ)

வாககுமனமுமவுனமுறவெநதைநினை
நோககுமவுனமிநதநூலறிவிலுண்டாமோ (கங)

ஒன்றாயப்பலவாயுலகமெஙகுந்தானேயாய
நினறாயையாவெனைநீநீஙகறவெளிதாமோ. (கச)

ஆவிததுணையேயருமருநதேயெனறனைநீ
கூவியழைததினபஙகொடுததாற்குறைவாமோ. (கரு)

எததனையோவின்விளையாட்டெந்தாயகேளிவ்வளவென்
றததனையுமெனனாலறியுநதரமாமோ. (கசா)

தேடுவார்தேடுஞ்சிவனேயோவினறிருததாள
கூடுவான்பட்டதுயாகூறற்கெளிதாமோ. (கஎ)

பற்றினைப்பற்றுமெந்தாய்ப்பற்றுவிடாற்கேவலத்தி
னுற்றுவிடுநெஞ்சமுனையொன்றிநிற்பதெப்படியோ. (௧௮)

ஒப்பிலாவொன்றேநினதுண்மையொன்றுங்காட்டாமற்
பொய்ப்புவியைமெய்போற்புதுக்கிவைத்ததென்னேயோ. (௧௯)

காலால்வழிநடவுங்காலத்தேகண்மூளைத்தாற்
போலேயெனதறிவிற்போந்தறிவாய்நில்லாயோ. (௨௦)

தன்னரசுநாடாஞ்சடசாலபூமிமிசை
யென்னரசேயென்னையிறையாகநாட்டினையோ. (௨௧)

திங்களமுதாநின்றிருவாக்கைவிட்டரசே
பொங்குவிடமன்னையபொய்ந்நூல்புலம்புவனோ. (௨௨)

உன்னவுன்னவென்னையெடுத்துள்விழுங்குநின்னிறைவை
யின்னமின்னங்காணாமலெந்தாய்சுழல்வேனோ. (௨௩)

ஆராவமுதனையவானந்தவாரியென்பாற்
றாராமலையாநீதள்ளிவிடவந்ததென்னோ. (௨௪)

நின்றநிலை.

நின்றநிலையேநிலையாவைத்தானந்த
நிலைதானேநிருவிகற்பநிலையுமாகி
யென்றுமழியாதவின்பவெள்ளந்தேக்கி
யிருக்கவெனைத்தொடர்ந்துதொடர்ந்திழுக்குமந்தோ. (௧)

இருக்காதிமறைமுடிவுஞ்சிவாகமாதி
யிதயமுங்கைகாட்டெனவேயிதயத்துள்ளே
யொருக்காலேயுணர்ந்தவர்கட்கெக்காலுந்தா
னொழியாதவின்பவெள்ளமுலவாநிற்கும். (௨)

கற்றதுங்கேட்டதுந்தானேயேதுக்காகக்
கடபடமென்றுருட்டுதற்கோகல்லாலெம்மான்
குற்றமறக்கைகாட்டுங்கருத்தைக்கண்டு
குணங்குறியற்றின்பநிட்டைகூடவன்றோ. (௩)

பாடுகின்றபனுவல்.

பாடுகின்றபனுவலோர்க, டேடுகின்றசெல்வமே
நாடுகின்றஞானமன்றி, லாடுகின்றவழகனே. (௧)

அத்தனென்றநின்னையே, பத்திசெய்துபனுவலாற்
பித்தனின்றுபேசவே, வைத்ததென்னவாரமே. (௨)

சிந்தையன்புசேரவே, வந்துநின்னைநாடினேன்
வந்துவந்துளின்பமே, தந்திரங்குதானுவே. (௩)

அண்டரண்டம்பாவுநீ, கொண்டுநின்றகோலமே
தொண்டாகண்டுசொரிகணீர், கண்டுநெஞ்சுகரையுமே. (௪)

அன்னைபோலவருண்மிகுத்து, மன்னுஞானவரதனே
யென்னையேயெனக்களித்த, நின்னைநானுநினைவனே. (௫)

ஆனந்தக்களிப்பு.

சங்கர சங்கர சம்பு - சிவ - சங்கர சங்கர சங்கர சம்பு.

ஆதியநாதியுமாகி - எனக் - கானந்தமாயறிவாய்நின்றிலகுஞ், சோதிமவுனியாய்த்தோன்றி - அவன் - சொல்லாதவார்த்தையைச் சொன்னானடிதோழி. சங்கர (௧)

சொன்னசொல்லையேதென்றுசொல்வேன் - என்னைச் - சூதாயத் தனிக்கவேசும்மாவிருத்தி, முன்னிலையேதுமில்லாதே - சுக - முற்றச்செய்தேயென்னைப்பற்றிக்கொண்டானடி. சங்கர (௨)

பற்றியபற்றறவுள்ளே - தன்னைப் - பற்றச்சொன்னான்பற்றிப்பார்த்தவிடத்தே, பெற்றதையேதென்றுசொல்வேன் - சற்றும் - பேசாதகாரியம்பேசினான்றோழி. சங்கர (௩)

பேசாவிருமைகளைப்பேசி - சுத்தப் - பேயங்கமாகப்பிதற்றித்திரிந்தேன், ஆசாபிசாசைத்துரத்தி - ஐய - னடியிணைக்கீழ்ப்படக்கக்கொண்டானடி. சங்கர (௪)

அடக்கிப்புலனைப்பிரித்தே - அவ - னருபமேனியிலணைப்பொருத்தேன், மடக்கிக்கொண்டானென்னைத்தனனுட் - சற்றும் - வாய்ப்பேசாவண்ணமாபுஞ்செய்தானடி. சங்கர (௫)

மரபைக்கெடுத்தனைக்கெட்டேன் - இத்தை - வாய்விட்டுச்சொல்லிடவாழ்வெனக்கில்லை, கரவுபுருஷனுமல்லன - என்னைக் - காக்குந்தலைமைக்கடவுள்காணமினே. சங்கர (௬)

கடலினமடைவிண்டதென்ன - இரு - கண்களுமானந்தக்கண்ணீர்சொரிய, உடலும்புளகிதமாக - என - துள்ளமுருகவுபாயஞ்செய்தானடி. சங்கர (௭)

உள்ளதுமில்லதுமாய்முன் - உற்ற - வுணர்வதுவாயுள்ளூறளவக்கண்டதெல்லாந், தன்னெனச்சொல்லியென்னையன - என்னைத் - தானாக்கிக்கொண்டசமர்த்தைப்பார்தோழி. சங்கர (௮)

பாராதி பூதநீயல்லை - உன்னிப் - பாரிந்திரியங்கரணநீயல்லை, யாராயுணர்வு நீயென்றான் - ஐய - னன்பாயுரைத்த சொல்லானந்தந் தோழி. சங்கர (௯)

அன்பருக்கன்பான மெய்யன் - ஐய - னானந்தமோனனருட் குருநாதன், தன்பாதஞ் சென்னியில் வைத்தான் - என்னைத் - தானறிந்தேனனைத்தானிறந்தேனே. சங்கர (௧0)

இறப்பும் பிறப்பும் பொருந்த - எனக் - கெவ்வணம் வந்ததென்றெண்ணிப் பாரென்றான், மறப்பு நினைப்புமாய் நின்ற - வஞ்ச - மாயா மனத்தால் வளர்ந்தது தோழி. சங்கர (௧௧)

மனதேகலலாமெனக்கன்றே - தெய்வ - மௌனகுருவாகி வந்து கைகாட்டி, எனதாம் பணிபற மாற்றி - அவ - னின்னருள் வெள்ளத் திருத்திவைத்தானடி. சங்கர (௧௨)

அருளாலெவையும் பாரென்றான் - அத்தை - யறியாதே சுட்டி யென்னறிவாலே பார்த்தேன், இருளான பொருள் கண்டதல்லால் - கண்ட - வென்னையுங் கண்டிலனென்னேடி தோழி. சங்கர (௧௩)

என்னையுந் தன்னையும் வேறா - உள்ளத் - தெண்ணாத வண்ணம் இரண்டறச் செய்தே, சொன்னதுமோ வொரு சொல்லே - அந்த - சொல்லால் விளைந்த சுகத்தையென் சொல்வேன். சங்கர (௧௪)

விளையுஞ் சிவானந்தபூமி - அந்த - வெட்டவெளிநண்ணித் துட்டவிருளாக, களைபக களைந்து பின் பார்த்தேனை - ஐயன் - களையன்றி வேறொன்றுங் கண்டிலன் தோழி. சங்கர (௧௫)

கண்டார் நகைப்புமிவ்வாழ்க்கை - இரு - கண்காணநீங்கவுங் கண்டோந்துயிரோன், கொண்டாரே போறபோதாலும் போகும் - இத்திற - குணமேது நலமேது கூறாய் நீ தோழி. சங்கர (௧௬)

நிலமேதுமறியாத வென்னைச் - சுத்த - நாதாந்த மோனமாநாட்டகத்தே சேர்த்துச், சலமேது மில்லாமலெல்லாம் - வல்லா - னருளாலென்னைத் தலைமீது தாக்கினனே தோழி. சங்கர (௧௭)

தாக்குநல்லானந்தசோதி - அணு - தன்னிற்சிறியவென்னைத் தன்னருளாற், போக்குவரவற்றிருக்கும் - சுத்த - பூரணமாக்கின புதுமை காணின்னே. சங்கர (௧௮)

ஆக்கியளித்துத்துடைக்குந் - தொழி - லத்தனை வைத்துமென்னுள்ளத்தையேனுந், தாக்கறநிற்குஞ் சமர்த்தன் - உள்ள - சாக்ஷியைச் சிக்கிக்கத்தக்கது தோழி. சங்கர (௧௯)

சிந்தைபிறந்ததுமாங்கே - அந்தச் - சிந்தையிறந்துதெளிந்ததுமாங்கே, எந்தநிலைகளுமாங்கே - கண்ட - யான்றானிரண்டற்றிருந்ததுமாங்கே. சங்கர (உ0)

ஆங்கென்றுமீங்கென்றுமுண்டோ - சச்சி - தானந்தசோதிய கண்டவடிவாய், ஓங்கிநிறைந்ததுகண்டாற் - பின்ன - ரொன்றெனவிரண்டென்றுரைத்திடலாமோ. சங்கர (உக)

என்றுமழியுமிக்காயம் - இத்தை - யேதுக்குமெய்யென்றிருந்தீருலகீர், ஒன்றுமறியாதீரோ - யம - ஞேலைவந்தாற்சொல்லவுத்தரமுண்டோ. சங்கர (உஉ)

உண்டோநமைப்போலவஞ்சர் - மல - மூறித்ததும்புமுடலைமெய்யென்று, கொண்டோபிழைப்பதிங்கையோ - அருட் - கோலத்தைமெய்யென்றுகொள்ளவேண்டாவோ. சங்கர (உங)

வேண்டாவிருப்பும்வெறுப்பும் - அந்த - வில்லங்கத்தாலேவிளையுஞ்சனனம், ஆண்டானுரைத்தபடியே - சற்று - மசையாதிருந்துகொள்ளறிவாகிநெஞ்சே. சங்கர (உச)

அறிவாருமில்லையோவையோ - என்னை - யாரென்றறியாதவங்கதேசத்தில், வறிதேகாமத்தீவிற்சிக்கி - உள்ள - வான்பொருடோற்கவோவந்தேனன்றோழி. சங்கர (உரு)

வந்தவரவைமறந்து - மிக்க-மாதர்பொன்பூமிமயக்கத்திலாழும், இந்தமயக்கையறுக்க - எனக் - கெந்தைமெய்ஞ்ஞானவெழிலவாள கொடுத்தான். சங்கர (உசு)

வாளாருங்கண்ணிபாமோகம் - யம - வாதைக்கனலைவளாக்குமெய்யென்றே, வேளானவனுமெய்விட்டான் - என்னின் - மிக்கோர் துறக்கைவிதியன்றோதோழி. சங்கர (உஎ)

விதிக்கும்பிரபஞ்சமெல்லாஞ் - சுத்த - வெயின்மஞ்சளென்ன வேவேதாகமங்கள், மதிக்குமதனைமதியார் - அவர் - மார்க்கந்துன்மார்க்கஞ்சன்மார்க்கமோமானே. சங்கர (உஅ)

துன்மார்க்கமாதாமயக்கம் - மனத் - தூயர்க்குப்பற்றாதுசொன்னேனசனகன், தனமாகக்கீர்த்திட்டாந்தம - அவன - னானந்தமான சதானந்தனன்றோ. சங்கர (உகூ)

அன்றென்றுமாமென்றமுண்டோ - உனக் - கானந்தம்வேண்டினறிவாகிச்சற்றே, நின்றுறமெறியுமெனவே - மற்ற - நீதியெம்மாதிநிகழ்த்தினனன்றோழி. சங்கர (ஙய)

சங்கர சங்கர சம்பு - சிவ - சங்கர சங்கர சங்கர சம்பு.

அகவல்.

திருவருண்ஞானஞ்சிறந்தருளொழிக்குங்
குருவடிவானகுறைவிலாநிறைவே
நின்றவொனறேநினமலவடிவே
குன்றுபபொருளேகுணப்பெருஙகடலே
யாதியுமநதமுமானநதமயமாஞ்
சோதியேசததேதொலைவிலாமுதலே
சீமலிதெயவத்திருவருள்தனா
பாராமுதலணடபபரப்பெலாநிறுவி
யண்டசமுதலாமெணடருநாலவகை
யேழுபிறவியிற்றுழாதோஙகு
மனநதயோனியினினமபெறமலக
வணுமுதலசலமாணவாககையுங
கணமுதலளவிற்கற்பகாலமுங
கனமப்பகுதிததொனமைககீடா
விமைப்பொழுதேனுந்தமககெனவறிவிலா
வேழையுயிரததிரளவாழவமைததனை
யெவ்வுடலெடுததாரவவுடலவாழககை
யினபமெனவேதுன்பமிலையெனப
பிரியாவணணமுரிமையின்வளாகக
வாதரவாககாதலுமமைததிட்
டேகமின்றியேதேகநானெனன
வறிவுபோலறியாமையியககிக்
காலமுஙகனமமுஙகட்டுங்காட்டியே
மேலுநரகமுமேதகுசுவாககமும
மாலறவகுததனையேலுமவணண
மமையாககாதலிறசமயகோடி
யறமபொருளாதிதிறமபடுநிலையிற்
குருவாயுணாததியொருவாபோலனைவருங்
தததநிலையேமுததிமுடிவென
வாததர்க்கமுமபோதநூலகளு
நிறைவிற்காட்டியேகுறைவினறிவயஙக
வஙகஙகுனறனையெஙகுமாகிச
சமயாதீதததன்மையாகி
யிமையோரமுதலியயாவருமுனிவருங்

தம்மைக்கொடுத்திட்டெம்மையாளென
வோர்ந்திருக்கமாசற்றஞான
நலமுங்காட்டினைஞானமிலைக்கு
நிலையுங்காட்டுதனின்னருட்கடனே.

வண்ணம்.

அருவென் பனவுமன்றி யுருவென் பனவுமன்றி
யகமும் புறமுமன்றி முறைபிறழாது
குறியுங் குணமுமன்றி நிறைவுங் குறைவுமன்றி
மறையொன் றெனவிளம்ப விமலமதாகி
அசலம் பெறவுயர்ந்து விபுலம் பெறவளர்ந்து
சபலஞ் சபலமென்று ளறிவினாசான
ஞானவெளியிடை மேவுமுயிராய்— (ரு)
அனலொன் றிடவெறிந்து புகைமண் டிடவெதன்று
புனலொன் றிடவமிழ்ந்து மடிவிலதாதை
சருவம் பொழுதுயர்ந்து சலனம் படுவதன்று
சமாகொண் டழிவதன்றெ ரியலபினதாகும
அவனென் பதுவுமன்றி யவளென பதுவுமன்றி
யதுவென் பதுவுமன்றி யெழிலகொடுலாவு
மாருநிலையறி யாதடடியே— (௰)
இருளென பதுவுமன்றி யொளியென் பதுவுமன்றி
யெவையுந தனுளடங்க வொருமுதலாகு
முளதென பதுவுமன்றி யிலதென் பதுவுமன்றி
யுலகந் தொழவிருந்த வயன்முதலோர்கள்
எவருங் கவலைகொண்டு சமயங் களில்விழுந்து
சுழலும் பொழுதிரங்கி யருள்செயுமாறு
கூறரியசக மாயையறவே— (௰ரு)
எனதென் பதையிகழ்ந்த வறிவின் றிறனினின்று
மறிவொன் றெனவிளங்கு முபயமதாக
வறியுந் தரமுமன்று பிறியுந் தரமுமன்று
வசரஞ் சரமிரண்டி னொருபடியாகி
எதுசந் ததநிறைந்து தெதுவித் தனையிறந்த
தெதுமங் களசுபங்கொள் சுகவடிவாகும்
யாதுபரமதை நாடியறிநீ (௨)

பருவங் குலவுகின்ற மடமங் கையர்தொடக்கு
கபடந் தனிலவிழ்ந்து கெடுநினைவாகி
வலையின் புடைமறிந்த மரியென் றவசமுண்டு
வசனந் திரமுமின்றி யவரிதழுறல
பருகுந் தொழிலிணங்கி யிரவும் பகலுமினசொல்
பகரும் படிதுணிந்து குழலழகாக
மாலைவகைபல சூடியுடனே— (௫)
பதுமந் தனையிசைந்த முலையென றதையுகந்து
வரிவண் டெனவழன்று கலிலெனவாடுரு
சிறுகிண் கிணிசிலம்பு புனைதண்டை கணமுழங்கு
மொலிநன் றெனமகிழ்ந்து செவிகொள நாசி
பசுபஞ் சளின்வியந்த மணமுந் திடமுகந்து
பவமிஞ் சிடவிறைஞ்சி வரிசையினாடு
காலினமிசைமுடி சூடிமயலாய— ( )
பருணும தெருளுடன்வந்து கதியென் பதைமறந்து
மதனன சலதிபொங்க விரணமதான
வளிபுனை டனைவனைந்து விரலகொண் டுறவணைந்து
சுரதசு சுகமிதென்று பரவசமாகி
பருவுந் தொழினமிகுந்து தினமுந் தினமுமவிஞ்சி
வளரும் பிறைகுறைந்த படிமதிசோர
வானரமதென மேனிதிரையாய— (௬)
வயதும படவெழுந்து பிணியுந் திமிதிமென்று
வரவுஞ் செயலழிந்து விருமலுமாகி
யனமுஞ் செலுதலின்றி விழியுஞ் சுடாகளின்று
முகமுங் களைகளின்று சரிமெயனநாடி
பலையின் புறவிருந்த வினமுங் குலைகுலைந்து
கலகஞ் செயவிருண்ட யமனவரும்வேளை
பேதுதுணைபழி காரமனமே. (௧)

ஆக பாடல் ௧, ௪௫௨.

தாயுமானசுவாமிகள்பாடல்

முற்றுப்பெற்றது.

தாயுமானசுவாமிகளுடைய மாணாக்கராகிய அருளையரென்பவர்

அந்தச்சுவாமிகளைத்துதிசெய்த

அருள்வாக்கியவகவல்.

திருவளர் கருணைச் சிவானந்த பூரண
மொருவரு மறியா வொருதனிச் சித்து
நவந்தரு பேதமாய் நாடக நடித்துற
பவந்தனை நீக்கிய பரிந்தருள் பராபரங்
கண்ணுங் கருத்துங் கதிரொளிபோல
நண்ணிட வெனக்கு நல்கிய நன்மை
யொன்றாய்ப் பலவா யொப்பிலா மோனக்
குன்றாய் நிறைந்த குணப்பெருங் குன்ற
மண்ணையும் புனலையும் வளியையுங் கனலையும்
விண்ணையும் படைத்த வித்திலா வித்துப்
பந்த மனைத்தையும் பாழ்பட நூறியென்
சிந்தை யுட்புகுந்த செழுஞ்சுடர்ச் சோதி
விள்ளொணா ஞானம் விளங்கிய மேலோர்
கொள்ளைகொள் ளொணாக் குறைவிலா நிறைவு
தாட்டா மரைமலர்த் தாணினைப் பவர்க்குக்
காட்டா வின்பங் காட்டிய கதிநிலை
வாக்கான மனத்தான மதித்திட வரிதென
நோக்கா திருக்க நோக்கிய நோக்க
மாகிய வறிவா யகண்டமா யகண்ட
சோதியாய் விரிந்து துலங்கிய தோற்றம்
பரவெளி தன்னிற் பதிந்த வென்னுளத்தின்
விரவி விரவி மேற்கொளும் வெள்ளஞ்
சுட்டுக் கடங்காச் சோதி யடியார்
மட்டுக் கடங்கும் வான்பெருங் கருணை
யெல்லைக் கடங்கா வேகப்பெருவெளி
தில்லைப் பொதுவிற் றிருநடத் தெய்வம்
வாதவூ ரரசைத்தயை வரிசையாய் விழுங்கும்
போதவூர் மேவுகர்ப் பூர விளக்குச்
சுகரை யகண்டத் தூவெளியெல்லாந்
திகழவே காட்டுஞ் சின்மய சாட்சி
செழுந்தமி ழப்பரைச் சிவலிங்க மாகி

விழுங்கிய ஞான வித்தக வேழ
மெழிற்றரு பட்டினத் திறை வரையென்று
மழிவிலா விலிங்க மாகிய வநாதி
சாந்த பூமி தண்ணருள் வெள்ள
மார்ந்த நீழ லசையாக் ககனம்
பரவுவா ரெஞ்சிற் பரவிய மாட்சி
யிரவுபக லற்ற வேகாந்தக் காட்சி
யாட்சிபோ லிருக்கு மகிலந் தனக்குச்
சாட்சியா யிருக்குந் தாரகத் தனிமுத
லாணும் பெண்ணு மலியுமல் லாததோர்
தாணுவாய் நின்ற சத்தாந் தனிச்சுட
ரெள்ளு மெண்ணெயு மெப்படி யப்படி
யுள்ளும் புறம்பு முலாவிய வொருபொரு
ளளவிலா மதந்தொரு மவரவர் பொருளென
வுளநிறைந் திருக்கு மொருபொற் பணதி
துள்ளு மனப்பேய் துடிக்கத் தறிக்கக்
கொள்ளு மோனவாள் கொடுத்திடு மரசு
பெரிய பேறு பேசாப் பெருமை
யரிய வுரிமை யளவிலா வளவு
துரிய நிறைவு தோன்றா வதீதம்
விரியுநல் லன்பு விளைத்திடும் விளைவு
தீராப் பிணியாஞ் சென்ன மறுக்க
வாரா வரவாய் வந்தசஞ் சீவி
யாலைக் கரும்பா கமுதக் கட்டிநீள்
சோலைக் கனிபலாச் சுளைகத லிக்கனி
பாங்குறு மாங்கனி பாறேன் சருக்கரை
யோங்குகற் கண்டுசேர்த் தொன்றாக் கூட்டி
யருந்திய ரசமென வறிஞர் சமாதியிற்
பொருந்திய வின்பம் பொழிசிற் சுகோதய
மெங்கணு நிறைந்த வியல்பினை யெனக்குச்
செங்கையால் விளக்கத் தெரித்தமெய்த் தேசிகன்
றனையறி வித்தனுத் தற்பர மாகி
யென்னுளத் திருந்தரு ளேக நாயக
னடிமுடி யில்லா வருட்பொரு டனக்கு
*முடியடி யிதுவென மொழிந்திடு முதல்வன
மெய்யலான மற்றவை மெய்யல வெல்லாம்

பொய்யென வறியெனப் புன்னகை புரிந்தோ
னருளும் பொருளு மபேதமா யிருந்து
மிருதிற னென்னு மியலுமுண் டென்றோ
னருளெனக் குண்டே லருளும் வெளிப்படும்
பொருண்மையந் தானே பொருந்துமென் றுரைத்தோன்
சத்தசத் திரண்டு தன்மையுந் தானே
யொத்தலாற் சதசத் தனைத்தென வுரைத்தோ
னுணவு மருவிடி னருளுறு தென்னக
காணரு நேர்மையாற் காணவே யுரைத்தோன்
சென்மமுள் ளளவுந் தீரா திழுக்கும்
கன்மம் விடாதெனக் காட்டிய வள்ள
லுளதில தெனவு முறுதலான் மாயை
வளமில தெனவும் வகுத்தினி துரைத்தோ
னில்லறத் திருந்து மிதய மடங்கிய
வல்லவன் றானே மகாயோகி யென்றோன்
றுறவறத் திருந்துஞ் சூழ்மனக் குரங்கொன்
றறவகை யறியா னஞ்ஞானி யென்றோ
னிறவா மனத்தா னிறக்க வுணர்த்திப்
பிறவா வரந்தரும் பேரறி வாள
னத்தனைத் தருளா லனைத்தையு மியக்குஞ்
சுத்தமா மாயையின் றோற்றமென் றுரைத்தோ
னிருண்மல மகல வினைசந்தி லழுந்தும்
பொருளருட் டிரோதைப் பொற்பெனப் புகன்றோன்
வீறு சிவமுதல் விளம்பிய படியே
யாறுமா காதியென் றறிஞருக் குரைப்போன்
கொல்லா விரதங் குவலயத் தோர்க
ளெல்லாம் பெறுமினென் றியம்பிய தயாநிதி
தருமமுந் தானமுந் தவமும் புரிபவர்க்
குரிமையா யவரோ டுறவு கலப்பவன்
றன்னுயிர் போலத் தரணியின் மருவிய
மன்னுயி ரனைத்தையும் வளர்த்திடும் வேந்தன்
களவுவஞ் சனைகள்செய் கருமிக டமக்குந்
தெளிவுவந் துறவருள் செய்திடுந் திறத்தோன்
றன்பெறும் பேறு சகமெலாம் பெறவே
வான்பெருங் கருணை வழங்கிய மாரி
தஞ்சமென் றடைந்த தாபதர் தம்மை

யஞ்சலென் றருளு மறிஞர் சிகாமணி
சீவ கோடிகளுஞ் சித்த கோடிகளும்
யாவரும் புகழ யாவையு முணர்ந்தோன்
யானென தென்று விறைவனெம் பெருமான்
றானவ னாகிய தலைவனெங் கோமா
னருணகிரியார்க் காறு முகனசொலும்
பொருளல மல்லது பொருளென மதியான்
பூத முதலாப் பொலிந்திடு நாத
பேதமுங் கடந்த பெருந்தகை மூர்த்தி
மூலா தார முதலா யுள்ள
மேலா தாரமும் வெறுவெளி கண்டனை
மண்டல மூன்றிலு மன்னிய வுருவிதுங்
கண்டவை யதிலுங் கடவுளாய நின்றோன்
பகர்சம யந்தொறும் பரமே யிருந்து
சுகநடம் புரியுந் தொழிலெனச் சொன்னோன்
பேத வபேத பேதா பேத
போத மிதுவெனப் புகன்றிடும் புண்ணிய
னதுநா னெனவே யாறறிடு மனுடவரு
சதுர்வே தாந்தத் தன்மையென் றுரைத்தோ
னல்லும் பகலு மழிவா னோர்கருச
சொல்லும் பொருளுஞ் சுவையெனச் சொன்னோன்
சுத்தனே குருவாஞ் சுவாமிநா யகனெனி .
னதிகமெய் யருஞ் ஞான மலைவோ வென்றே
னேசயோ கத்தறு நிருமல லாகெழு
மிராசயோ கத்திறை யிராச யோகத்தான
பொறுமை தெளிவு புனித வாசார
மறவிலா வுண்மை வார மியற்கை
தண்ணமா சாந்த தயங்கிய கீர்த்தி
யெண்ணெண் கலைபயி லிணையிலாக் கல்வி
நல்ல விரகத் தநிலை சத்திய
மில்லை யென்னும மல்லாக்குந் தருங்கொடை
நற்குண னெல்லா நண்ணிய பெருந்தகை
சிற்குண வாரி திருவருட் செல்வன்
சரமே லெடுத்துக் கருத்துற வணங்கிப்
பரமே யுனக்குப் பரமெனப் பகர்ந்தோ
னாலடி மேவு மரசினை யடுத்தே

சிலமெய்ஞ் ஞானந் தெளிந்தன னெனவுஞ்
சித்த மௌனி திடசித்த மாக
வைத்த நிலையின் வளர்ந்தன னெனவு
மூலன் மரபின் முளைத்த மௌனிதன்
பாலன் யானெனவும் பரிவொடும் பகர்ந்தோன்
வடமொழி யியற்கையின் மகிமையை யுணர்ந்து
திடமுறு முப்பொருட் டிறத்தையுந் தெளிந்து
கண்டமு தென்னக் கனிரச மென்னத்
தண்ட மிழ்மாரி தன்னைப் பொழிந்து
சித்தியு முத்தியுஞ் சிறந்தருள் கொழிக்கு
நித்திய நிரஞ்சன நிராலம்ப நிறைவைப்
பாடியு நாடியும் பணிந்தெழுந் தன்பா
லாடியு மரற்றியு மகங்குழை வெய்தியு
முடலங் குழைய வுரோமஞ் சிலிர்ப்பப்
படபடென் றுள்ளம் பதைத்துப் பதைத்துப்
பரங்குறு நெட்டுயிர்ப் பாகிப் பரதவித்
தேங்கி யேங்கி யிரங்கி யிரங்கி
யோய்ந்த பம்பரம்போ லொடுங்கியே சிறிது
மேய்ந்த விழிக ளிமைப்பது மின்றிச்
சோர்ந்து சோர்ந்து துவண்டு துவண்டுமெய்
யார்ந்த வன்போ டவசமுற் றடிக்கடி
யண்ணடுக் குறவே யுருகியே சற்றுத்
தண்ணமா மொழியுந் தழுதழுத் திடவே
யுள்ளும் புறம்பு மொருமித் துருகி
வெள்ள நீர்போல விழிநீர் பெருக்கிக்
கன்று பசுவைக் கருதிக் கதறிச்
சென்றுசென் றோடித் திகைப்பது போல
வென்புநெக் குடைய விருகரங் குவித்துப்
புன்புலால் யாக்கை பொருந்தா தினியென
வுணர்ந்துணர்ந் தன்பா யுவகைமேற் கொண்டினிச்
சணம்பிரி யேனெனக் கருதியே குறித்துத்
திருவுரு வெல்லாந் திருநீ றிலங்க
விருகர நளின மியன்முடி குவித்துப்
பூரண சந்திரன் போலொளி காட்டுங்
காரண வதனங் கவினுறு வெயர்வுற
விண்ணிலா வென்னவே யிலங்கிய சிறுநகை

தளதள வென்னத் தயங்கி யெழில்பெற
வித்தன்மை யெல்லா மிசைந்து மிவனருட்
சித்தெனச் சிவகதி சேர்ந்தவ ருரைப்பப்
பாத்திர மாடப் பரிவுட னுடிச்
சாத்திரங் காட்டித் தயவுசெய் தருளும
வல்லவ னெனவே மன்னுயிர்க ளாக
வெல்லையி லன்ப னிவனென விளங்கி
யீன வுலகத் தியற்கைபொய் யென்றே
ஞானநூன் மெய்யென நவின்றினி திரங்கிக
கேவல சகலங் கீழ்ப்பட மேலாய்
மேவருஞ் சுத்த மெய்யினை நல்க
வருளே யுருவுகொண் டவனியில் வந்த
பொருளே யிவனெனப் பொலிந்திடும் புனிதன்
சைவஞ் சிவனுடன் சம்பந்த மென்பது
மெய்வளர் ஞானம் விளக்குமென றிசைத்தோன்
கதிர்விழி யொளியுறக் கலத்தல சித்தாந்த
விதிமுறை யாமென விளம்பிய மேலோன
முடிவினி லாகம முறைமையி னுண்மையை
யடியவர்க் குறித்துரைத் தருளிய வண்ணல்
சிதம்பர நோமை திறமா வுரைத்திறை
பதம்பர வெனப்பகர் பரமமெய்ஞ் ஞானி
முத்திபஞ் சாக்கர முறைமையி லயிக்கியஞ்
சத்திய மிதுவெனச் சார்ந்தவர்க் குரைத்தோ
னஞ்செழுத் துள்ளே யனைத்தையுங் காட்டியென
னெஞ்செழுத் தியகுரு நீதி மாதவ
னெல்லா நிறைந்த விறைவன் செயலெனக்
கல்லா வெனக்குங் கருணைசெய் கடவுள
குருவரு ளாலே கூடுவ தல்லாற
றிருவரு ளுறுதெனத் தெரிந்திட வுரைத்தோன்
குருவுரு வருளெனக் கொண்டபின் குறையாப
பொருண்மய மாமெனப் புகன்றிடு போத
னைந்த மூர்த்தி கலையு மெழிற்குரு வடிவெனச்
சிந்தையிற் றியக்கறத் தேர்ந்தவர்க் குரைத்தோன்
சதாசிவ மென்றபேர் தான்படைத் ததுதா
னதாவதே பொருளென் றெடுத்தெடுத் துரைத்தோன்
கல்லானை கன்னல் கவர்ந்திடச் செய்தவ

னெல்லாம் வல்லசித தெம்மிறை யென்றே
னெவ்வுயிர் தோறு மிறைமே வியதிறஞ்
செவ்விய பிறமபடி செபயிடு மென்றே
னெவ்வண மெவரெவ ரிசைததன ரவரவாக
சவ்வண மாவனெம் மானென வறைந்தோ
னொருபா ணனுகமே யொருசிவ னட்படின்
வருமடி யாரதிறம் வழுததொணா தென்றோன்
சிவ னடியாரைச் சிவனெனக் காண்பவ
னெவனவன் சிவனே யென்றெடுத துரைத்தோன்
விருப்பு வெறுப்பினை வேறறப் பறிததுக்
கருப்புகா தென்னைக் காததருள் செய்தோ
னிருசொல் லுரையா தியானின்ப மெய்த
வொரிசொல் லுரைதத வுயர்குண பூதா
னத்துவா மாக்க மாறையு மசற்றித்
தத்துவா தீதத் தன்மையைத் தந்தோன்
திருமகண் மருவிய திகழவள மறைசையில்
வருமுனா வாளன் மருளிலா மனததா
னெண்ணிய வெண்ணமெல் லாந்தெரிந் தெனக்குத்
தண்ணருள் செய்தவன் றாயு மானவ
னொருமொழி பகர்ந்த வுதவியா லவன்ற
னிருபத முப்போ திறைஞ்சிவாழ்த் துவனே.

அருள்வாக்கியவகவல் முற்றுப் பெற்றது.

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT.

உ

சிவமயம்.

விளம்பரம்.

புத்தகங்கள்.	விலை. ரூ அ.	தபால். அ. ப
விநாயகர் தோத்திரத்திரட்டு ...	0—2	0—6
ஸ்தலமுறைத் தேவாரம் (திக்) ...	6—0	8—0
ஷை (தின) .	5—0	8—0
பண்முறைத்தேவாரம் ..	3—8	8—0
நல்லாப்பிள்ளை பாரதம் செய்யுள் 2-வாலம் ...	9—0	15—0
ஸ்ரீமகாபாரத வசனம் 4-வாலம் ...	5—8	14—0
கந்தபுராணச் செய்யுள் ..	7—0	14—0
கந்தபுராண வசனம் படத்துடன் உபதேசகாண்டம் செய்யுள் உள்பட 2-வாலம் ...	5—0	13—0
கந்தபுராண வசனம் படத்துடன் ...	2—8	8—0
உபதேசகாண்டம் செய்யுள் 4,384 ..	2—0	4—0
கம்பராமாயணம் செய்யுள் 7-காண்டம். ..	6—0	14—0
திருவிளையாடல்புராணம் படத்துடன் வசனம் ...	2—8	6—0
தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு உரையுடன்	3—4	6—0
திருக்குறள் பரிமேலழகர் உரை ...	4—0	8—0
ஷை உரையும், தெளிபொருள் விளக்கமும் ...	3—8	8—0
தமிழ் பேரகராதி (திக்) ...	4—3	8—0
ஷை (தின) ...	3—8	7—0
வைணவபக்தவிஜயமவசனம் ..	2—8	6—0
சிவதாமோதத்திரம் மூலமும் உரையும் ...	1—8	5—0
காசிரகசியம் உரையுடன் ...	3—0	4—0
விவேகசிந்தாமணி வசனம் சகல சாஸ்திரங்களையும் விளக்கப்பட்டிருக்கின்றது ...	2—0	4—0
அசுவசாஸ்திரம் மாட்டுவாகிடம் ...	2—0	2—0
ஐந்திலக்கணத்தொன்னூல்விளக்கம் மூலமும்உரையும்	1—8	3—0
சித்தியார் சுபக்ஷம் ஞானப்பிரகாசர் உரை ...	1—4	2—0
மார்க்கண்டேய புராணவசனம் 24-அத்தியாயம் வரையில் ...	1—4	2—0
காசிமான்மியம் தலயாத்திரைப் பொதுவிதி ...	0—8	1—0
ஒருபா உண்மைஉபதேசம் உரை இது பதிபசு பாசம் என்னும் முப்பொருளை எளிதில விளக்கும் சைவசித்தாந்த நூல் ...	0—8	1—0
சிவஞானபோதச்சிற்றுரை ...	0—8	1—0
தக்ஷிணகைலாசபுராணம ...	0—8	1—0
கைவல்ய மூலமும் உரையும் ...	0—6	1—0
திருப்போரூர் சந்நிதிமுறை ...	0—5	1—0
திருத்தணிகை சந்நிதிமுறை ...	0—4	1—0

சர்வசாட்சிமாலை கடவுள் அந்தாதி	...	0—4	1—0
பஞ்சதந்திரப்பாடற்கதை	...	0—4	1—0
சைவதூஷணபரிகாரம்	...	0—4	1—0
திருமயிலாப்பூர் தலபுராணச்சுருக்கம்	...	0—3	0—6
சிவசிவவெண்பா சோமேசர்வெண்பா	...	0—2	0—6
ஔவைக்குறள்	...	0—2	0—6
படிக்காசுப்புலவர் கலம்பகம்	...	0—2	0—6
அறப்பளீசுரசதகம்	...	0—2	0—6
குமரேசசதகம்	...	0—2	0—6
மணவாளநாராயணசதகம்	...	0—2	0—6
தண்டலையாசதகம்	...	0—1	0—6
காந்தமகாசங்கிரகம்	..	0—2	0—6
செகந்குருநாதர் பிள்ளைத்தமிழ் ஷை ஊசல்	...	0—2	0—6
சுப்பிரமணியர் க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்.		0—2	0—6
திருக்கழுக்குன்றத் தலபுராணச் சுருக்கம்	..	0—2	0—6
தொண்டைமண்டலசதகம்	...	0—2	0—6
சிவோதகாஷ தீபிகை	...	0—1	0—6
பஞ்சாக்ஷரப் பதிபசுபாசவிளக்கம்	...	0—1	0—6
நறுகொடை ஈகையைப்பற்றி	...	0—1	0—6
சேனைத்தலைவர் மரபுவிளக்கச் சூராவளி	...	0—1	0—6
உமாபதி சிவாசாரியார் நெஞ்சுவிடுதூது	..	0—1	0—0
நால்வர் நான்மணிமாலை	...	0—1	0—0
முருகர்கலிவெண்பா	...	0—1	0—0
சோணாசலசதகம் திருவருணைக் கலிவெண்பா	...	0—1	0—6
சிவபோகசாரம்	...	0—1	0—6
கபிலைபாதி காளத்திபாதி வெண்பா அந்தாதி	...	0—1	0—6
இருச்சொல்லலங்காரம், மூசசொல்லலங்காரம்	...	0—1	0—6
வைஷ்ணவ சமயதீபம், இந்நூல் வைஷ்ணவ சமயத்திற்குரிய திருப்பதிகள், ஆழ்வார்கள், ஆசாரியர்கள் திவ்யசரித்திரங்களைச் சுருக்கி வினாவிடையாக விளக்கும்	...	0—1	0—6
வாசகக் குறிப்பு—இது தமிழைக் கற்போரும், எழுதுவோரும் (கமா) முதலிய அடையாளக் குறிப்பை இடங்கண்டறிவதற்கு மிகவுபயோகமானது	...	0—1	0—6

வாலியுபேயெபி லனுப்பக்கேட்கிறவர்கள் தபால் சார்ச்சும் மணியார்டர் பீசும் சமக்கானது, சென்னை தங்கசாலைவீதி இந்து தியலாஜிகல் யந்திரசாலை ம-ா-ா-ஸ்ரீ கா. முருகேசமுதலியாரிடத்தினும் முன்னனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

சி. அ. இரத்தினசபாபதிமுதலியார்,
முதல் நம்பர், குமரப்பமுதலிவீதி,
சென்னபட்டணம்.